Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 20 (12.03.2004) வெள்ளிக்கிழமை இதழ் :164

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

(சி/2228)

# கருணா விவகாரத்தின் பின்னணி: இந்தியா - அமெரிக்கா தலையீடு!

## தமிழ் மக்கள் சந்தேகிப்பதாக இந்தியப் பத்திரிகை தகவல்!

(புதுடெல்கி)

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவின் பின்னணியில் இந்தியாவும், அமெரிக்காவும் இருப்பதாக தமிழ் மக்கள் சந்தேகிப்பதாக 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

**கருணா விவகாரம் குறித்து இந்தியாவிலிருந்து வெளிவரும் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது -**

கிழக்கு மாகாணத் தளபதி கருணாவின் செயற்பாட்டின் பின்னணியில் வெளிச்சக்தி ஒன்று உள்ளதாக - தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகம் கூறியுள்ளது. உறுதியான நிதிப்பங்களிப்பு மற்றும் கட்டமைப்பு பின்னணியின்றி கருணா இந்த நடவடிக்கையினை எடுத்திருக்கமுடியாது.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் வேட்பாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்த அதேநேரம் கருணாவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எனவே, அமெரிக்கா இந்த நடவடிக்கையின் பின்னணியில் இருந்து செயற்படுவதாக தமிழர்கள் சந்தேகம் கொண்டுள்ளார்கள்.

அத்துடன், கிழக்கு மாகாணம் தொடர்பாக பூகோள ரீதியில் அமெரிக்காவுக்கு அக்கறை உண்டெனவும் திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கடற்படைத்தளம் என்பன தமது சர்வதேச கடல்வலயப் பாதுகாப்புக்கு உதவுமென அமெரிக்கா கருதுகிறது.

அமெரிக்கா - இலங்கையுடன் திறந்த வான் வெளி ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட முயன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புக்குச் சென்ற பத்திரிகைகள் எரிப்பு!

(மட்டக்களப்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு, எரிக்கப்பட்டன.

ஓட்டோ ஒன்றில் வந்த சிலரே இவ்வாறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நின்றுகொண்டிருந்த பிக்கப் மீது பயணிகள் பஸ் மோதியது!

### ஏழு பேர் காயம்

ஏ-9 வீதியில் பயணிகள் பேருந்தும், திணைக்களம் ஒன்றுக்குச் சொந்தமான பிக்கப் வாகனமும் நேருக்குநேர் மோதியதில் ஏழு பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பரந்தன் உமையாள்புரம் வீதியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின்போது, மகேந்திரன் (வயது 52),

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் தூதுவர் கிளிநொச்சி விஜயம்!

### தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாடு மற்றும் அடுத்த மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு அரசியல் நிலைவரங்கள் தொடர்பாகவும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜுகர் எலியாஸ் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசே தமிழ்மக்களை ஏமாற்றியிருக்கிறது!

### ஜெயக்குமார் அடிகளார்

தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் ஆனால் அரசுதான் அவர்களைப் பல தடவை ஏமாற்றியிருக்கிறது என கியுடெக் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அருட்திரு.வணபிதா ஜெயக்குமார் அடிகளார் நேற்று இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸிடம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உள்விவகாரங்களில் நோர்வே அரசு தலையிடாது!

### கிளிநொச்சியில் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளீதரன் நீக்கப்பட்டது உள்ளிட்ட புலிகளின் உள் விவகாரங்களில் நோர்வே தலையிடாது என்று நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே சொல்ஹெய்ம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினரை சந்தித்து சொல்ஹெய்ம் பேசினார்.

இந்தச் சந்திப்பில் - தமிழ்ச்செல்வனுடன் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், மூத்த உறுப்பினர் கரிகாலன், மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச்சந்திப்பின் பின்னர் சொல்ஹெய்ம் மேலும் கூறியதாவது:

பிரதமர் ரணிலுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையே இதேபோல் மோதல் சூழ்நிலை உருவானபோது கூட நாங்கள் தலையிடவில்லை அதேபோல்தான் புலிகள் இயக்கத்திலிருந்து விநாயகமூர்த்தி முரளீதரன் நீக்கப்பட்ட பிரச்சினையிலும் நாங்கள் தலையிட



வில்லை.

தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நாங்கள் மூன்று விடயங்கள் குறித்து விவாதித்தோம்.

கிழக்குப் பிராந்தியத்தில் விநாயகமூர்த்தி முரளீதரன் நீக்கப்பட்டது தொடர்பாகவும்,

வடக்கு கிழக்கு மக்களுக்கான சர்வதேச (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண நிலவரம் குறித்து பிரிட்டிஷ் தூதுவர் மதிப்பீடு!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம்செய்து குடாநாட்டு நிலவரங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் கோவில் வீதியிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் கலந்துரையாடலை நடத்திய அவர், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை நடத்தினார்.

தொடர்ந்து தீவகத்திற்கு விஜயம் செய்த அவர், அங்குள்ள நிலவரங்கள் குறித்தும் ஆராய்ந்தார். அவரிடம் அங்குள்ள நிலைமைகள் பற்றி விளக்கியதாக யாழ்.அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீபன் இவன்ஸ்சுடன், ஸ்ரீபன் எயின்ஸ்வோர்த், மார்க்வெல்டன், மாட்டின் கன்றிவேல், நிலக்ஸன் சுவர்ணபாயிஸ் முதலானோர் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அரச வைத்தியர்களும் வேலைநிறுத்தத்தில் குதிப்பு!

(யாழ்ப்பாணம்)

நாடு தழுவிய ரீதியில் அரச வைத்தியர்கள் மேற்கொள்ளும் வேலைநிறுத்தப் போராட்டத்தினைத் தொடர்ந்து நேற்று காலை முதல் யாழ்.மாவட்ட அரச வைத்தியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது. கண், தோல் சிகிச்சை பிரிவுகள் முற்றாக பாதிக்கப்பட்டன. அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வந்தவர்கள் சிலரையும், 10 வயதிற்குட்பட்ட நோயாளர்களையும் வைத்தியர்கள் பார்வையிட்டனர்.

சுகாதாரசேவை ஊழியர்களுக்கு 1977 ஆம் ஆண்டு முதல் சம்பள நிலுவை கொடுக்கப்படாமையினால் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, சம்பள நிலுவையைப் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அரச சிரேஷ்ட வைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies.

# விடுதலைக்கு தடையாக இருக்கும் சக்திகளை

# தேர்தல் மூலம் வேரோடு பிடுங்கி எறிவோம்!

## யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வியத்தகு சாதனைகளால் உலக அரங்கில் தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கிறது என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ்த் தேசியம், தமிழீழ விடுதலை நோக்கிய பயணம் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருக்கும் இவ் வேளையில்,

மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் மூலம் தமிழ்த்தேசிய இனத்தின் ஒற்றுமையை உலகிற்கு பறைசாற்றுவோம். சந்தர்ப்பத்தை எமக்கு சாதகமாக்கிக் கொள்வோம்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் என்பதை வலியுறுத்தி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது. ஆதலால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது. ஆதலால் பொது அமைப்புக்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்காக உங்கள் தேர்தல் பணிகளை முடுக்கி விடுமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இந்த அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர் தாயகம் விரைவில் விடுதலை பெற்றால் மட்டும் எமது மண்ணில் தமிழன் பாதுகாப்பாக வாழமுடியும் என்பது வரலாற்று உண்மையாகும். விடுதலை நோக்கி முன்னேற ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறும் தேர்தலை சரியாகப் பயன்படுத்துவோம். எமது விடுதலைக்கு தடையாக இருக்கின்ற விரும்பப்படாத தீய சக்திகளை இந்தத்தேர்தல் மூலம் பிடுங்கி எறியவேண்டும் என்பதே எமது விருப்பம். எனவே இவர்களை நிராகரித்து தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களிக்க வேண்டுமென வேண்டுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் தையல், மனையியல் கண்காட்சி!

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்று வரும் தையல் பயிற்சி நிலையத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான தையல், மனையியல் கண்காட்சியும், விற்பனையும் நாளையும் நாளைமறுதினமும் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 6.00 மணிவரை நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.செல்வரத்தினம் கலந்துசிறப்பிக்கவுள்ளார்.

இக்கண்காட்சியில் அனைவரும் கலந்துகொண்டு, மாணவிகளின் முயற்சிக்கு ஊக்கமளிக்குமாறு நெடுந்தீவு பகுதி தையல் போதனாசிரியர் கேட்டுள்ளார். (113)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பெற்றோர்களால் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யப்பட்ட வீரசங்கிலியன் விளையாட்டு மைதானத்தின் முன்னால் கல்லூரி பீடாதிபதி, விரிவுரையாளர்கள், உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள்.

# தமிழ்மக்களின் தற்பாதுகாப்பிற்காக அனைவரும் ஓரணியில் திரளவேண்டும்!

## கூட்டமைப்பு வேட்பாளர் மாவை சேனாதிராஜா

தென்னிலங்கையில் குடும்ப அரசியல் அதிகாரப் போட்டிகளும், பேரினவாத சக்திகளின் தேர்தல் கூட்டுக்களும் தமிழ்த்தேச மக்களின் விடுதலைக்கும், சமாதானத்திற்கும் மீண்டும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய பேரினவாத எழுச்சிக்கும் இராணுவ ஆக்கிரமிப்புக்கும் எதிராக தமிழ்மக்களின் தற்பாதுகாப்புக்காக தமிழ்த்தேச மக்களாகிய நாம் அனைவரும் ஓரணியில் திரளவேண்டியது அவசியமாகும். இதற்காகவே தமிழ்க கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தேர்தல் களத்தில் போட்டியிடுகிறார்கள் என தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட தலைமை வேட்பாளர் மாவை சேனாதிராசா கடந்த செவ்வாய்க்கிழமை ஈச்சமோட்டை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய அவர், கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் சிங்கள அரசுகளும், வெளிநாடுகளும் எங்கள் போராட்டத்தை பயங்கரவாதம் என வர்ணிதன. கடந்த தேர்தலில் கிடைத்த மக்களின் ஆணை காரணமாக தமிழ்த் தேசத்தின் ஆயுதப் போராட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இரண்டு ஆண்டுகள் நிலைத்து நிற்கின்ற யுத்தநிறுத்தம் ஏற்பட்டது. இந்த யுத்தநிறுத்தம் தொடர்ந்து நீடிக்கவும், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வலியுறுத்தவும தமிழ்மக்கள் ஒட்டுமொத்தமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து மீண்டும் ஒருமுறை ஆணை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன்,

அழிந்துபோன எமது தேசத்தையும், சீரழிந்துபோன எமது மக்களின் வாழ்க்கையையும் மீளக்கட்டியெழுப்பிட இடைக்கால நிர்வாக அதிகாரக் கட்டமைப்பை நிறுவிடவும், சர்வதேசத்தின் ஆதரவை வென்றிடவும் எங்கள் ஒவ்வொரு வாக்குரிமையையும் பயன்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர் சச்சி மாஸ்ரர் தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரசாரக் கூட்டத்தில் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களான சூ.சிறில், சி.வி.கே.சிவஞானம் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் வேட்பாளர் ஈழவேந்தன் ஆகியோரும் உரையாற்றினர். (58)

# தமிழர் விடுதலையிலும், கல்வியிலும் பிரதேசவாதத்தை தூண்டவேண்டாம்!

## வவுனியா வளாக கல்விச் சமூகம் அறிக்கை

(வவுனியா)

தமிழர் விடுதலையிலும், கல்வியிலும் தனிநபர்கள் பிரதேச வாதத்தினை தூண்ட வேண்டாம் என, வவுனியா வளாக கல்விச் சமூகம் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் முகமாக தமிழர் தேசியக் கூட்டமைப்பு ஒன்றிணைந்துள்ளது. சர்வதேச சமூகத்திற்கு தமிழ்மக்களின் ஒற்றுமையை வெளிபடுத்தி அவர்களின் அபிலாஷைகளை பெற்றுகொள்ளும் நேரமிது.

இந்த வேளையில் தனிநபர்கள் சொந்த நலனுக்காக பிரதேசவாதம் என்னும் தீயசக்தியைத் தூண்டாதீர்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் உள்ள தீய சக்திகளினால் ஏற்பட்டிருக்கும் பிரதேச நிலையானது தமிழ மக்களாகிய எம்மையும் பாதித்துள்ளது.

கிழக்கு மாகாண மக்களின் சுதந்திர வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. எமது தமிழீழ தேசியத் தலைவரினால் முன்னெடுக்கப்படும் இந்த விடுதலைப் போராட்டத்தில் கல்வித் தரத்தில் தமிழ மக்கள் முன்னேறிவரும் நிலையில் தமிழர் விடுதலையை விரும்பாத இனவிரோத சக்திகள் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் அச்சுறுத்தப்பட்டமை தமிழீழ விடுதலைக்கும் கல்விக்கும் துரோகமிழைத்த செயலாகும்.

இன விரோதசக்திகளே தமிழர் வரலாற்றில் கறைபடிந்த உமது முகங்களையே இனிக் காணப்போகின்றீர்கள்?

எனவே, வவுனியா வாழ் சமூகமே கிழக்கு மாகாணத்தில் நிகழும் இந்த இனவிரோத செயலை கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையில் தொடர்ந்து நடத்துவதற்கும் மற்றும் விரிவுரையாளர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் இயல்புநிலை தொடர இன்று கறுப்புப்பட்டி அணிந்து பிரதேசவாதத்தினை தூண்டும் விரோததிகளுக்கு எதிராக எமது உணர்வுகளை வெளிப்படுத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 1 ஆம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளதால், இந்த வருட கலைப்பீட புகுமுக மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

## பகல் நேர மின்சாரம் வழங்க நயினாதீவில் நடவடிக்கை!

நயினாதீவு பிரதேசத்திற்கு பகல் நேர மின்சாரம் வழங்குவதற்கென புதிய மின் இயந்திரம் ஒன்று நேற்று மதியம் கடற்படை தரையிறங்கு கலம் மூலம் அங்கு கொண்டு சென்று இறக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சனி, ஞாயிறு தினங்களில் மட்டுமே பகல் நேர மின்விநியோகம் இடம்பெற்றதாகவும், இந்தப் புதிய இயந்திரம் பொருத்தப்பட்டதும் வாரம் முழுவதும் பகல்நேர மின்சாரம் வழங்கப்படவுள்ளதுடன், வெகுவிரைவில் 24 மணிநேர விநியோகம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (113)

அழகும், கலைத்துவமும் மிக்க
நவீன முறையிலான நம்பகமான இடம்
சுரபி பதிப்பகம்
பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள்,
பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள்
மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 5107

நிறஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, ஸ்ரீபிரியா நடித்த
பில்லா
(சி-2262)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00, (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
BLOOD SPORT - 2

ராஜா யாழ்ப்பாணம்.
சிம்பு, சோனியா அகர்வால்,
நாசர் நடித்த
கோவில்
(சி-2263)
10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)



... நூலகம் யாழ்ப்பாணம்

# தேர்தல் கண்காணிப்புக்கு கனடிய அரசு நிதியுதவி!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலின் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக கனடா அரசு 7 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அரச சார்பற்ற நிறுவனங்களான, பவ்ரல் அமைப்பு, மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் ஆகியவற்றுக்கே, இந்தப் பணம், கடந்த 9ஆம் திகதி கனடிய உயர்ஸ்தானியராலயத்தினால் வழங்கப்பட்டது.

இது குறித்து கனடிய உயர்ஸ்தானிகர் வெல்லரி ரேமண்ட் கருத்துக் தெரிவிக்கையில்,

தேர்தல் கண்காணிப்பு அரச சார்பற்ற நிறுவனங்களான, பவ்ரல் அமைப்பு, மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம், ஆகியவை நீதியானதும், நியாயமானதுமான தேர்தலுக்காக பணியாற்றிவருவதன் காரணமாக, இப்பணத்தை இந்த நிறுவனங்களுக்கு வழங்குவதில் தாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

மேலும், இந்தப் பொதுத்தேர்தலின்போது, வன்முறைகள் அற்ற வகையில், மக்கள் ஆணை இடம்பெற வேண்டும் என்பதே தமது விருப்பமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிற்றூழியர் பற்றாக்குறையால் அவசர சிகிச்சை நோயாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிற்றூழியர் பற்றாக் குறையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்படவேண்டிய நோயாளர்களை எடுத்துச் செல்லல் மற்றும் அவசர நோயாளர் சிகிச்சைக்கு உடனடியாக நோயாளர்களை சக்கர நாற்காலி, ஸ்ரெச்சர் முதலியனவற்றை எடுத்துச்செல்ல முடியாமல் இருப்பதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது.


அது மட்டுமின்றி, நோயாளர்களைப் பொருட்படுத்தாது சில சிற்றூழியர்கள் உடனடியாக சிகிச்சை அளிக்கப்படவேண்டிய நோயாளர்களைக்கூட தாமதமாகவே வார்ட்டுக்கு கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் மற்றும் நோயாளர்களுடன் கூட வருவோர் போன்றோர் சிற்றூழியர்களுடன் முரண்படவேண்டிய நிலையும் தோன்றிவருகிறது.

இது குறித்து யாழ். போதனா வைத்தியசாலையின் சிற்றூழியர் பிரிவு பிரதிநிதி ஒருவரிடம் கேட்டபோது - சிற்றூழியர்கள் வெளி நோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் கடமையாற்ற விரும்புவதில்லை எனவும் வைத்தியசாலை நிர்வாகமும் போதியளவு சிற்றூழியர்களை இந்தப் பகுதிகளுக்கு நியமிப்பதில்லை எனவும் தெரிவித்தார். (ப)

# இலங்கையின் சமாதான நடவடிக்கையில் இந்திய அரசாங்கம் பங்குபற்ற வேண்டும்

## பிரதமர் ரணில் கோரிக்கை



இலங்கையின் சமாதான செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்பதற்கான ஆலோசனைகள் வழங்குவதோடு மட்டுமன்றி, சமாதான செயற்பாடுகளிலும் இந்தியா கட்டாயமாக பங்குபற்ற வேண்டுமென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவின் செய்தி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே, பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

இராணுவத்தினருக்கான பயிற்சிகள் மற்றும் போர்த் தளபாட உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் முதலானவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை இந்தியாவுடன் செய்துகொள்ள தனது தலைமையிலான அரசு விரும்பியதையும் ரணில் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஏனைய சில நாடுகளுடனும் தமது அரசு விரிவான கூட்டு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டதாகவும் குறிப்பிட்டுள்ள ரணில் - இதனை இந்தியா விரும்பாதபோதும், இலங்கை இராணுவத்தினருக்கான பயிற்சிகளை இந்தியா அதிகரித்துள்ளதையும் குறிப்பிட்டார்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் மட்டுமன்றி வர்த்தக கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் செய்துகொள்ளப்பட வேண்டும் எனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் தெரிவித்தார்.

## அரச ஊடகங்களை

# தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்க வேண்டும்

## ஜ திக ஹெல உறுமய கோரிக்கை

அரச ஊடக நிறுவனங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், மற்றும் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம், ஆகியவற்றை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க பொறுப்பேற்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கேட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் பிக்குகள் விடயத்தில் அரச ஊடகங்கள் நேர்மையற்ற வகையில் நடந்துகொள்வதாகவும், தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான பிக்குகள் பலருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன. ஜாதிக ஹெல உறுமயவின் அங்கத்தவர்கள் என்ற போர்வையில் பிக்குகள் மூலம் பௌத்த ஆலயங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதான போக்கு காணப்படுவதாகவும் ஜாதிக ஹெல உறுமய மேலும் தெரிவித்தது.

# 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலைவாய்ப்பு!

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் பின் ஆட்சி அமைக்கவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் திட்டங்களை வகுத்துள்ளது.

ராகமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வது தொடர்பான திட்டங்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ளது. இதனை அனைத்து மக்களும் அறிந்துகொள்ளமுடியும்.

மக்கள் அடுத்து வரும் ஆட்சியை எமது சுதந்திர முன்னணிக்கு வழங்கினால், நாம் எதைச்செய்யப் போகின்றோம் என்ற விரிவான திட்டம் ஒன்றை நாம் தயாரித்துள்ளோம். இதனை நாம் ஊடகங்களூடாக வெளிப்படுத்துவோம்.

எமது தேர்தல விஞ்ஞாபனத்தில் ஆட்சியை அமைத்து ஒருவருட காலத்துக்குள் சமாதான நடவடிக்கை மற்றும் சீரழிந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது போன்ற விடயங்கள் உள்ளன. இதையிட்டு நாம் மக்களுக்கு பொய் கூறவில்லை.

இத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தால் அரச ஊழியர்களின் சம்பளம் 3 மாத காலத்திற்குள் அதிகரிக்கப்படும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு முகங்கொடுக்க முடியாத மக்களுக்கு நாம் சம்பள அதிகரிப்பினை மேற்கொள்வோம்.

புதிய ஆணைக்குழு ஒன்றினூடாக 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச அலுவலகங்களில் வேலை வாய்ப்பினை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் தெரிவித்தார். (01)

# அரசாங்க வைத்தியர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தம்

அரசாங்க வைத்தியர்கள் நேற்று முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அரசாங்கவைத்தியர்களின் சம்பள முரண்பாடுகள் குறித்து இதுவரை இணக்கப்பாடுகள் ஏற்படாததை அடுத்து இவ்விடயம் குறித்து நடவடிக்கை எடுக்காமையைக் கண்டித்தே தாம் தொடர்ச்சியான பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமது சம்பள முரண்பாடுகள் குறித்து சுகாதார அமைச்சர் தயாரத்னாவுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டபோதிலும் அந்த விடயங்களை நடைமுறைப்படுத்த அமைச்சர் முன்வரவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகள் குறித்து இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் மேலும் பல்வேறு வகையில் போராட்டத்தை விஸ்தரிக்கப் போவதாக அரசாங்க வைத்தியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# பொலிஸ் நிலைய அதிகாரி இடமாற்றம் எதிர்த்து ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு

(கல்முனை)

கல்முனையில் பொலிஸ்நிலைய அதிகாரி ஒருவரை இடம் மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி பொது அமைப்புக்கள் ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளது.

கல்முனையில் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எச்.எம்.நசீமை இடமாற்றுவதாக ஜனாதிபதி பணித்துள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்முனை தமிழ், முஸ்லிம் தொகுதி ஒற்றுமை மன்றம் இதற்கான அழைப்பை விடுத்துள்ளது. (01)

## தேர்தலில் போட்டியிடும் பிக்குகள்

# பிச்சாபாத்திரத்துடன் சென்று வாக்குக் கேட்பதை நிறுத்தவும்!

பிக்குகள் பிச்சைப் பாத்திரத்துடன் வீடுவீடாகச் சென்று வாக்குப் பிச்சை கேட்டு வருகின்ற இழிவான நிலையை நிறுத்திக்கொள்ள வேண்டும் என, தேசிய பிக்குகள் முன்னணி செயலாளர் சந்திரலோக தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் சந்திரலோக தேரர், நாடாளுமன்ற ஆசனங்களுக்காக பிக்குகள் போட்டியிடுவதானது, புத்த சாசனத்திற்கு எதிரான நடவடிக்கை. இதனை மகாநாயக்க தேரர்களும் கண்டித்திருக்கின்றனர். இது சங்கத்திற்குள் நிச்சயமாக ஒரு பிரிவினையை ஏற்படுத்தும்.

நாட்டில் ஆட்சிக்கு வருபவர்கள், எந்த மதத்தவராக இருந்தாலும் மகா சங்கத்தினரிடம் ஆலோசனை பெறுவதும், மகாசங்கத்தினர் ஆட்சியில் உள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்குவதும் தொன்று தொட்டு நடந்து வருகின்ற நிலையில், பிக்குகள் அரசியலுக்கு செல்ல வேண்டியதன் அவசியம் என்ன எனவும் சந்திரலோக தேரர் கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில், தேசிய பிக்குகள் முன்னணி, பௌத்தர்களின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு, மற்றும் பல மகாநாயக்க தேரர்களும் பங்கு பற்றும் பௌத்த மாநாடு ஒன்று, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வாக்களிக்கும் முறை பற்றி எழுச்சிப் பேரவை பிரசாரம்!

வாக்காளர் தமது வாக்குகளைப் பிழையின்றி பிரயோகிக்க வழிசெய்யும் வகையில் வடமராட்சி கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவை பிரசார வேலைகளில் இறங்கியுள்ளது. இந்தப் பிரச்சார வேலைகளில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் முன்பள்ளி ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், மாணவர் அமைப்பு உறுப்பினர்கள் ஆகியோரை ஈடுபடுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இவர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்று வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை காரியாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட தேசிய எழுச்சிப் பேரவை உத்தியோகத்தர் கடந்தகாலத் தேர்தல்களில் வாக்களிப்பில் ஏற்பட்ட தவறுகளை வாக்காளர் மீண்டும் விடாத வகையில் ஒழுங்காகவும், முழுமையாகவும் வாக்களிக்க வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். மேலும் வாக்களிக்கும் முறைபற்றிய தெளிவான விளக்கத்தையும் அளித்தனர். (13)



நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் யுரேகர் எலியஸை அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்பதைக் காணலாம்.

# இலங்கையுடனான முதலாவது டெஸ்ட் அவுஸ்ரேலிய அணி பலமான நிலையில்

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் காலியில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்டின் நான்காம் நாளான நேற்று அவுஸ்ரேலிய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் ஹைடன், லீமன், மார்ட்டின் ஆகிய மூவரது சதங்களுடன் 8 விக்கெட்டுக்களை இழந்து 512 ஓட்டங்களுடன் மிகவும் பலமான நிலையில் உள்ளதுடன் இலங்கை அணிக்கு 353 என்ற வெற்றி இலக்கையும் நிர்ணயித்துள்ளது.

2 விக்கெட் இழப்பிற்கு 193 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்று தனது நான்காம் நாள் ஆட்டத்தை தொடங்கிய அவுஸ்ரேலிய அணி ஆட்டநேர முடிவின்போது 8 விக்கெட்டுக்களை இழந்து 512 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டதாக அறிவித்தது.

இந்த அணி சார்பாக ஹைடன் 130, லீமன் 129, மார்ட்டின் 110, லங்கர் 32, பொண்டிங் 28, சைன்மட்ஸ் 24, ஓட்டங்களைப் பெற்றதுடன் கிஸ்கிறிஸ்ட், ஷேன்வோன் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்ரேலிய அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 512 ஓட்டங்களையும் பெற்று ஆட்டத்தையும் நிறுத்திக்கொண்டது.

பந்து வீச்சில் முரளிதரன் 5, உபுல் சந்தன, ஜெயசூர்யா இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றியதன் மூலம் முரளிதரன், ஷேன்வோன் கைப்பற்றிய 496 விக்கெட்டுகளுடன் சமப்படுத்தியுள்ளார்.

353 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் நேற்று மாலை ஆடத் தொடங்கிய இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 3 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


ட்ரன்லீமன்

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கும் ஜெயசூரியா நேற்று களத்தடுப்பில் ஈடுபட்டவேளை கையில் காயமடைந்த காரணத்தால் இவருக்குப் பதிலாக அத்தப்பத்துவுடன் சங்ககார களமிறங்கியுள்ளார்.

## 3 நாள் கிரிக்கெட் போட்டி

### யாழ்.பல்கலைக்கழக அணியுடன் சென்.ஜோன்ஸ் அணி மோதுகிறது

(ஈச்சமோட்டை)

நூறு வருடங்களைக் கடந்திருக்கும் யாழ். மாவட்ட கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாகப் பாடசாலை அணியொன்று மூன்றுநாள் போட்டியில் மோதும் கிரிக்கெட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது.

சென்.ஜேன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து, சென்.ஜோன் கல்லூரி மோதுகின்றது. இந்தப் போட்டி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி மோதும் பெரும்போட்டித் தொடரின் 100 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இந்த வருடம் முதல் மூன்று நாள் போட்டியாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிக்கான பயிற்சிப் போட்டியாகவே சென்.ஜோன்ஸ் கல்லூரி - யாழ்.பல்கலைக்கழகத்துடன் விளையாடுவதாகத் தெரிய வருகின்றது. (58)

## பாடசாலை மட்ட கிரிக்கெட் இறுதிக் கட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை 19 வயது அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித்தொடர் - இறுதிக கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தத் தொடரில் இன்று நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு -

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதும் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி - தொடர்ந்து நாளை காலை 9.00 மணிமுதல் 6.00 மணி வரையும் நடைபெறும்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணியை எதிர்தது, யாழ். மத்திய கல்லூரி அணி மோதும் போட்டி நாளை சனிக்கிழமை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளும் பாடசாலை அணிகள் தவிர்ந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவுகள் இந்த வருடப் போட்டிகளை நிறைவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (58)

# அதிகளவிலான ஓட்டங்களைக் குவித்து பாகிஸ்தானுக்கு நெருக்கடி கொடுப்போம்

## கங்கூலி பேட்டி

(புதுடெல்கி)

'அதிகளவில் ஓட்டங்களைக் குவித்து பாகிஸ்தான் அணிக்கு நெருக்கடி கொடுப்போம' என இந்திய அணித் தலைவர் கங்கூலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கட் அணி 40 நாள் பயணமாக பாகிஸ்தான் சென்றது. இதற்கிடையில் பாகிஸ்தான் பயணம் குறித்து இந்திய அணித் தலைவர் கங்கூலி பேட்டியளித்துள்ளார். அவர் கூறியதாவது -

பாகிஸ்தானில் 40 நாட்களும் பாதுகாப்புப் பிரச்சினை. இருந்தாலும் அதை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு ஆட்டத்தில் முழுக் கவனம் செலுத்தி சிறப்பாக ஆடி வெற்றிபெறுவோம்.

கடந்த காலங்களில் பாகிஸ்தானுக்கு எதிராக நமது அணி சிறப்பாக ஆடவில்லை எனபது குறித்து இப்போது நினைத்து எந்தப் பயனும் இல்லை. அது நடந்து முடிந்த கதை. பாகிஸ்தாதனுக்கு 'எதிரான தற்போதைய போட்டி புதியதொடர் ஆகும்.

கடந்த ஒரு வருடமாக இந்திய அணி சிறப்பாக ஆடிவருகிறது. பாகிஸ்தான் பயணத்தில் நமது அணியின் துடுப்பாட்டத்துக்கும் அவர்களது பந்து வீச்சுக்கும் இடையேதான் போட்டி என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

அவுஸ்ரேலிய தொடரில் ஆடியது போல பாகிஸ்தானிலும் சிறப்பாக ஆடுவோம். அதிகளவிலான ஓட்டங்களைக் குவித்து பாகிஸ்தானுக்கு நெருக்கடி கொடுப்போம்.

கடந்த 6 மாத காலமாக இந்திய அணி தொடர்ந்து விளையாடி வருகிறது. இந்த சூழ்நிலையில் கபில்தேவ் அளித்த 3 நாள் பயிற்சி எந்த மாறுதலையும் அளிக்காது. எனினும் அவர் பயிற்சி அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடக்க வீரராக ஆடிவரும் ஷேவாக் தொடர்ந்து சிறப்பாக ஆடிவருகிறார். எனினும் சூழ்நிலையைப் பொறுத்து தொடக்க வீரர்கள் இறக்கப்படுவார்கள். பொதுவாக இந்திய - பாகிஸ்தான் இடையேயான போட்டியின்போது தான் ரசிகர்கள் அதிகளவு உணர்ச்சிவசப்படுகிறார்கள். இவ்வாறு கங்கூலி கூறினார்.


# வலைப்பந்தாட்ட கழகங்களின் இறுதிப் போட்டி இன்று நடைபெறும்


யாழ்.பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்டுவந்த வலைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான இறுதிப் போட்டிகள் இன்று பி.ப. 3.30 மணிக்கு சென்.மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விழல் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் பவானி அகிலன், முன்னாள் வலைப்பந்தாட்ட வீராங்கனை இரவீந்திரன் மேரியம்மா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனா் என யாழப்பாண பிரதேச செயலர் பா.செந்தில்நாதன் தெரிவித்தார்.

# பொன் அணிகளின் போர் இன்று ஆரம்பம்

விளையாட்டு


யாழ்ப்பாணக் கல்லூரி


சென்.பற்றிக்ஸ் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி - சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வருடாந்த கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இந்த ஆட்டம் 87 இற்கான ஏற்பாடுகளை வருடமாக இந்த வருடம் நடைபெறுகின்றது. இரு கல்லூரிக்கும் இடையிலான இந்த ஆட்டத்திற்கான ஏற்பாடுகளை இரு கல்லூரி அதிபர்களும் மேற் கொண்டுள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கும், நாளை காலை 9.30 மணிக்கும் இந்தப் போட்டி ஆரம்பமாகும். இதுவரை இரு கல்லூரிகளுக்குமிடையே நடந்து முடிந்த 86 ஆட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 28 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி 15 தடவைகளும் வெற்றிபெற்றதோடு, 24 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. சில ஆட்டங்களின் முடிவுகள் பதிவுகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளன.

கடந்த நான்கு வருடங்களாக இடம்பெற்ற இந்த இரு அணிகளுக்கிடையிலான போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியின் இறுதியில் ஒவ்வொரு துறையிலும் சிறப்பாக விளையாடிய வீரர்களும், தொடரின் ஆட்ட நாயகனும் தெரிவு செய்யப்பட்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த வருடம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி பங்குபற்றிய போட்டிகளில் ஐந்து போட்டிகள் வெற்றியும், மூன்று போட்டிகளில் வெறறி தோலவியுமின்றி முடிவடைந்தன.

யாழ்ப்பாணக் கல்லூரி பங்குபற்றிய போட்டிகளில் இரண்டு போட்டிகளில் வெற்றியும், ஒரு போட்டியில் தோல்வியும், ஐந்து போட்டிகன் வெற்றி தோல்வியுமின்றி முடிவடைந்தன.

கடந்த நான்கு வருடப் போட்டியில், சென்.பற்றிக்ஸ் அணி வெற்றிபெற்றாலும், இந்த வருடம் யாழ்ப்பாணக் கல்லூரி அணியில் அனுபவம்வாய்ந்த வீரர்கள் பலர் இருப்பதால், இந்தப் போட்டி பலத்த சவாலாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஜி. செல்வின் லொயட்டும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஜே.நிரோஷனும் தலைமை தாங்குகின்றனர்.

அணி வீரர்களின் விபரம் வருமாறு:

### யாழ்ப்பாணக் கல்லூரி அணி

**அமர்ந்திருப்போர் இடமிருந்து வலம் -**

பி.எல்.மோகன் (பயிற்றுனர்), எஸ்.எம்.திலீபன், ஜே.நிரோஜன் (அணித் தலைவர்), என்.ஏ. விமலேந்திரன் (அதிபர்), என்.எஸ்.செந்தூரன் (உபதலைவர்), ஆர்.குகன் (பயிற்றுனர்), ஏ. ஜெயரஞ்சன் (உடற்பயிற்சிப் பணிப்பாளர்),

**நிற்போர் - மத்திய வரிசை இடமிருந்து வலம் -**

எஸ்.தனராஜன், ஏ.அகிலநாதன், எஸ்.வை. தனுஜன், வி.நிருபன், கே.பெரியதம்பி, ஜே.தனுசன், எம்.ரமணன்.

**நிற்போர் பின்வரிசை இடமிருந்து வலம்-**

ஆர்.பாலு, கே.உதயகுமார், எம்.ஜென்குமார், ஜே.ஜெயசசந்திரன், ஜே.செந்தூரன்.


### சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி

**அமர்ந்திருப்போர் இடமிருந்து வலம் -**

எஸ்.சகாயராசா (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியரும், பயிற்றுனரும்), ஏ.எல்.சுஜீவன், எஸ்.பொல்டன் ஹெஸ்ரன், செல்வின் லொயிட் (அணித் தலைவர்), வண.பிதா.ஸ்ரீபன் பி.ஞானப்பிரகாசம் (அதிபர்), ஆர்.விநோதன் (உபதலைவர்), ஆர்.நிசாந்தன், எ.ஏவின்சன், ஏ.எஸ்.நிஷாந்தன் (உதவிப்பயிற்றுனர்) பி.ஜெயக்குமார் (கிரிக்கெட் பொறுப்பாசிரியர்).

**நிற்போர் இடமிருந்து வலம் -**

வி.ஜே.லூட்சன், எஸ்.ஜெனன்ராஜ், வி.விதுபாலா, ய.ஜெயந்திரன், ஏ.சுரேன், ரி.டியூரன், ரி.சுயாந்தன், ஜே.ஜதீஸ்வரன், பி.பத்மமுரளி.



அரசாங்க வைத்தியர்கள் நேற்று மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தினால் ஸ்தம்பிதமடைந்த - யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவைப் படத்தில் காணலாம்.

# கல்விச் சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தற்காலிகமாக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கல்விச் சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிந்த பின்னரே கல்விச் சேவையின் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் அடிப்படையில், இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை, கல்வியியலாளர் சேவை, ஆசிரியர் சேவை ஆகிய பிரிவுகளில் கடமையாற்றுபவர்களுக்கான இடமாற்றங்களே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றங்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இடமாற்றங்களை நிறுத்துமாறு அரச பொது சேவைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இவை தொடர்பாக அனைத்து மாகாண கல்வி அமைச்சுக்களுக்கும், செயலாளர்களுக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கல்வியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# 'தமிழர் ஜப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல்' நாளைமறுதினம் நூல் அறிமுக விழா

'தமிழர் ஜப்பானிய வாழ்வில் தைப்பொங்கல்' நூல் அறிமுக விழா நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் - நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த அறிமுகவிழாவுக்கு - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் ஆ.சிவநாதன் தலைமைதாங்குவார்.

மங்கள விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து, அகவணக்கம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் - ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரியர் பொ.அரவிந்தன் வரவேற்புரையாற்றவுள்ளார்.

ஆசியுரைகளை நெல்லை முருகன் ஆலய பிரதமகுரு சுப்ரசௌரி பாலக் குருக்களும், சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாவும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி துணை அதிபர் ஆறு திருமுருகனும், கம்பன்கழக அமைப்பாளர் பிரசாந்தனும், முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி மா.நடராஜசுந்தரமும், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியர் க.நவரத்தினமும் ஆற்றவுள்ளனர். வெளியீட்டு உரையினை கல்வியற்துறையைச் சேர்ந்த த.கலாமணி ஆற்றவுள்ளார்.

நயப்புரைகள் தமிழ்த்துறையின் கலாநிதி சி.சிவலிங்கராஜாவும், உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி அதிபர் சே.நடராஜாவும் ஆற்றுவர்.

நூல் வெளியீடு, முதற்பிரதி வழங்கல், சிறப்புப் பிரதி வழங்கலோடு, நூலாசிரியரின் உரையும் நன்றியுரையும் இடம்பெறவுள்ளது.

# கிராம அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவும்

## கல்வயல் கிராமஅலுவலர் கோரிக்கை

கல்வயல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம் (ஆண்கள்) பதிவு செய்யப்பட வேண்டியுள்ளதால், இந்தப் பகுதியிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களை அங்கத்துவக்கட்டணமாக 25 ரூபாவும், மாதாந்த சந்தாவாக 10 ரூபாவும் செலுத்தி உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளுமாறு கல்வயல் கிராம அலுவலர் கேட்டுள்ளார்.

தொழில், தொழிற்பயிற்சி, வெளிநாட்டு உதவி, தவணைக்கட்டண அடிப்படையில் விவசாய உபகரணங்களை வழங்கல் போன்ற பல்வேறு பணிகள் இந்த அமைப்பினால் செய்து கொள்ளப்பட இருப்பதால்- எதிர்வரும் 15 ஆம்' திகதி மாலை 7 மணிக்கு கிராமஅலுவலர் அலுவலகத்தில் ஒன்றுகூடி தமது உறுப்புரிமையைப் பதிவு செய்துகொள்ளுமாறு கிராமஅலுவலர் க.இராசரத்தினம் அறிவித்தார்.

அத்துடன், இதுவரை கமக்காரர் ஓய்வூதியத்திட்டத்தில் சேராதவர்களையும் உடன் அதில் இணையுமாறும் கேட்டுள்ளதுடன், கல்வயல் கிராமத்துக்கென பொதுமண்டபம் ஒன்று அமைப்பதற்கான காணி ஒன்றினை அன்பளிப்புச்செய்ய விருமபுபவர்களும், பொது அமைப்புக்களும் தமது ஆலோசனைகளையும் தம்மிடம் தெரிவிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (24)

# தேர்தல் அதிகாரிகள் கட்சிகளுடன் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகளுடனான கலந்துரையாடல் ஒன்று - எதிர்வரும் செவ்வாய் கிழமை காலை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சித்தலைவர்கள், செயலாளர்கள், சுயேட்சைக் குழுத்தலைவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.செயலக உதவித்தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதைவிட, அடுத்த புதன்கிழமை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கூட்டம் - காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் சகல உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

கனிஷ்ட தேர்தல் அலுவலர்களுக்கும், வாக்களிப்பு நிலைய எழுதுவினைஞர்களுக்குமான கலந்துரையாடல் - எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என யாழ் செயலக தேர்தல் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு தனியான பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்

வடமராட்சிக் கிழக்கு பிரதேசத்திற்கு - தனியாக பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் அமைக்கப்பட வேண்டுமென, அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க - வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் அமைப்பதற்கான கலநதுரையாடல் ஒன்று அண்மையில் வடமராட்சிக் கிழக்கு புனரமைப்பு காரியாலயத்தில் பளை பனை, தென்னை வள அபிவிருத்தி சங்கத் தலைவர் க.புவனேந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் வன்னி மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு உதவி ஆணையாளர் யாழ். மாவட்ட பனை, தென்னை வள கூட்டுறவு உதவி ஆணையாளர், கிளி. மாவட்ட நிர்வாக சேவை பொறுப்பாளர் முரளி, மறவன் மாஸ்ரர், கடற்புலி வடமராட்சிக் கிழக்குப் பொறுப்பாளர், பருத்தித்துறை, கிளிநொச்சி, பளை ஆகிய பனைதென்னை வள கூட்டுறவு சங்க பொது முகாமையாளர்கள், கூட்டுறவு பரிசோதகர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.(17)

# வரட்சி நிலையினால் நீர்மின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படலாம்

இலங்கையில் கடந்த 50 வருட காலத்தில் முதன்முறையாக பாரிய வரட்சிநிலை தற்சமயம் நிலவுகின்றது. இதன் காரணத்தினால் இந்த மாதம் இறுதிப் பகுதியில் நீர் மின்சாரம் உற்பத்தியில் தாக்கம் ஏறபடலாம் என அஞ்சப்படுகின்றது.

இதனால், மின்மாற்றிகளை பயன்படுத்தி, மின்சார உற்பத்தியை மேற்கொள்ள உள்ளபோதும், அதற்காக ஏற்படும் மேலதிக செலவான அலகு ஒன்றுக்கு 3 ரூபா கட்டணத்தை இலங்கை மின்சாரசபையே செலுத்தும் என அந்த சபை அறிவித்துள்ளது. தற்சமயம் நீர்த்தேக்கங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் 200 வோட்ஸ் ஆக குறையும்போது, பாரிய மின்சாரப் பிரச்சனை ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது. தற்சமயம் காலை 5 மணிமுதல் 8 மணிவரை 1000 மெகாவோட ஸ மின்சாரம் நுகரப்படுகின்றது. இரவில் 8 மணிமுதல் 11 மணிவரை 1500 மெகாவோட்ஸ் மின்சாரம் நுகரப்படுகின்றது.

# வாழ்வோதயம் அலுவலகம் அடம்பனில் திறந்து வைப்பு

வாழ்வோதய மீள் குடியேற்றத்திட்டம் இரண்டாம் கட்டமாக - நேற்று முன்தினம் மன்னார் அடம்பன் பிரதேசத்தில் மன்னார் ஆயர் மேதகு ராயப்பு யோசேப் ஆண்டகையால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் நிக்கிலாப்பிள்ளை, சீடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு டேமியன் பெர்னாண்டோ ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், மன்னார் வாழ்வோதய இயக்குநர் அருட்தந்தை பி.யேசுராஜா அடிகளார், மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் எம்.பரமதாஸ், கொழும்பு சீடெக் நிறுவன இணைப்பாளர் தெய்வேந்திரராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் ஆயர் - நாம் சொத்துக்களை இழக்கவில்லை, மனித மாண்பையே இழந்து நிற்கின்றோம். காலங்காலமாக கட்டிக் காக்கப்பட்ட மத ஒற்றுமை, கலை கலாசார பண்பாடுகள் இன்று எம்மத்தியில் அருகி வருகின்றன எனத் தெரிவித்தார்.

# விளக்கமறியலில் இருந்த சாரதி பிணையில் செல்வதற்கு அனுமதி

கடந்த மாதம் 12 ஆம் திகதி கைதடி - நுணாவில் பகுதியில் இடம்பெற்ற மினிபஸ் விபத்துக்குக் காரணமான, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறிப்பிட்ட மினிபஸ்சின் சாரதி - நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

15 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான் விபத்தில் சேதமடைந்த குறிப்பிட்ட மினிபஸ்சினை இரண்டு இலட்சம் ரூபாவிற்குப் பிணை சமர்ப்பித்து, எடுத்துச் செல்லவும் அனுமதி வழங்கியுள்ளார்.

இதேசமயம் குறிப்பிட்ட சாரதியை ஒவ்வொரு புதன்கிழமையும் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.(34)

# சின்னஞ்சிறு செய்திகள்

## 'இவ்வழியில் வாருங்கள்' திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

அசோக ஹந்தகமவின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட - 'இந்த வழியால் வாருங்கள்' திரைப்படம் - நாளை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது.

## கலந்துரையாடல்

உயர்பாதுகாப்பு வலய பிரதேசங்களிலுள்ள தோட்டங்களில்- தெங்கு விளைபொருட்களை உரிமையாளர்கள் எடுப்பது தொடர்பாக அனுமதி வழங்கக்கோரி, கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை 9.30 மணிக்கு கொடிகாமம் அரசினர் பாடசாலையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும்.

இதேவேளை, வடமாநிலத் தெங்கு உற்பத்தியாளர் சங்கம் நீண்ட நாட்களாகவே - வருமான இழப்பு, தோட்டஅழிவு சம்பந்தமான நட்டஈடு, உயர்பாதுகாப்பு வலய பிரதேசத்தில் உளள தோட்டங்களில் விளைபொருட்களை பெறுதல், தோட்டம் பராமரிப்பு, புனர்நடுகை தொடர்பான அனுமதிகளைத் தெங்கு அபிவிருத்தி சபையிடம் கோரிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திக்கம் வடிசாலையை மீளளிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி - பனை தென்னை வள கூட்டுறவு, சங்கத்திடம் திக்கம் வடிசாலையை மீளக்கையளிக்குமாறு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மத்திய ஆலோசனைக்குழு பனை அபிவிருத்தி சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமராட்சியிலுள்ள சீவல் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக உழைத்துவரும் வடமராட்சி - பனை தெனனை கூட்டுறவு சங்கம் திக்கம் வடிசாலை நடாத்தி, அதில் பெரும் லாபத்தை ஈட்டியதுடன், சீவல் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.(17)

## ஓட்டோ விபத்தில் சாரதி காயம்

ஓட்டோ ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி தலையில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நிலாவரை பகுதியில் இடம்பெற்றது. சம்பவத்தின்போது ந.றஜனிகாந் (வயது 24) என்பவர் படுகாயமடைந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நிலாவரை வீதியில் சென்றுகொண்டிருந்த ஓட்டோ வீதியிலிருந்த கிடங்கில் விழுந்ததில், அருகிலிருந்த மின்கம்பத்துடன் மோதியது எனத் தெரிவிக்கப்பட்டது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்



பெயர் : அ.அமலவட்சணா,
முகவரி : குருநகர், நெடுந்தீவு - 12.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------

முகவரி :----------


பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------
பெற்றோர் ஒப்பம்




# இசையை வியாபாரமாகக் கருதாமல் கலையாக வளர்க்கப்படல் வேண்டும்



கலைக்குளத்தில் பூத்திருந்து, சூரியனுக்கு முகம் காட்ட முடியும் என்று தங்களது திறமைகளை வெளியுலகத்திற்குக் காட்டிய பெண்களில் சுகன்யா சிவானந்தம் (வயது 27) என்பவரும் அடங்குவார். திருநெல்வேலி ஆடியபாத வீதியில் அமைந்துள்ள தனது வீட்டில் என்னை அழைத்து, சங்கீதத்தில் கதைத்து, சங்கீதத்துக்கு மரியாதை கொடுத்து - ஏற்றமும், இறக்கமுமில்லாமல் நடுநிலைமையில் நின்று புன்னகை தவழ எம்முடன் உரையாடியதிலிருந்து...

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 5 ஆம் வகுப்பு வரை படித்தேன். பின்பு க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவை சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் படித்தேன்.

எனது அம்மா ஒரு சங்கீத ஆசிரியராக றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 20 வருடங்கள் பணியாற்றினார். எனது அண்ணா லண்டனில் என்ஜினியராக உள்ளார். தம்பி (மொறட்டுவப் பல்கலைக் கழகத்தில் என்ஜினியர்) நான் நடுப் பிள்ளை. தனகுத் தான் குடும்பத்தில் கூடுதலான செலலம் இருப்பதாகத் தொவித்தார்.

முதலாம்வகுப்பில் திருகோணமலையில் நடந்த தமிழ்த்தினப் போட்டியில் அகில இலங்கையில் முதலாவது இடம்பெற்றேன். ஆர்.எஸ்.கேசவமூர்த்தி ஆசிரியரிடம் 5 ஆண்டுகள் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 1995 ஆம் ஆண்டுவரை வயலின் கற்றேன்.

சங்கீதம் முதலில் அம்மாவிடம்தான் கற்கமுடிந்தது. வயலின் கற்றுக்கொண்டிக்கும் காலப்பகுதியில் திலகநாயகம் என்பவரிடம் 1 வருடம் (1993-1994) சங்கீதம் கற்றேன். வட இலங்கை சங்கீதசபையில் 1995 ஆம் ஆண்டு சங்கீதப் பரீட்சையில் சித்தியடைந்தேன்.

இடம்பெயர்ந்து மீண்டும் யாழ்ப்பாணம் வந்ததும், யாழ். பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பாடத்தினை (1996-2000) 4 வருடங்கள் கற்று முடித்தேன். சமூகவியல் என்று படிக்கும்போது, சமூகம் பற்றிய கருத்துக்கள் அதில் அடங்கும். அதாவது, கலை கலாசார, பண்பாடு, அரசியல், பொருளாதாரம், கல்வி எல்லாவற்றினையும் அதனுள் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. எங்களுடைய சமூகம் பற்றியும், வெளிநாடுகளிலுள்ள சமூகம் பற்றியும், இரண்டையும் ஒப்பிட்டும் பார்ப்பேன்.

நாங்கள் சரியானதொரு வாழ்க்கையினை வாழ்வதற்கு, ஒரு நல்ல அடித்தளமாக இருப்பது கல்வி. அதாவது மனிதனைப் பற்றியும், பிரச்சினைகள் பற்றியும் இலகுவாகத் தீர்க்கின்ற முறைகளைப் பற்றியும் அறிந்துகொள்ள முடிகின்றது. இந்தப் பாடத்தின்மூலம், எந்தவொரு பிரச்சினைகளும் இலகுவாகத் தீர்த்துக்கொள்ள முடியும். இந்தச் சமூகவியல் பாடம் பற்றியும், அதன் பயன் பற்றியும் யாழ்ப்பாண மக்களுக்குச் சரியாக விளங்கவில்லைபோலும். அதுதான் இந்தப் பாடத்தினைத் தெரிவுசெய்யும் மாணவர்கள் குறைவாக உள்ளனர்.

சங்கீதத்தில் ஆர்வம் இருந்ததனால், கடைசி நான்காவது ஆண்டில் ஒரு ஆய்வுக் கட்டுரை எழுதிக்கொடுத்தேன். அதாவது, 'இலங்கையின் இசையினூடாக இனத்துவ அடையாளம்' என்ற தலைப்பில்தான் ஆய்வுக் கட்டுரை செய்தேன். அதற்குள் தமிழரின், சிங்களவரின், முஸ்லிம்களின் அடையாளகங்ளும் அடங்குகின்றன. வெளியிடங்களுக்குச் செல்லாமல் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் எழுதுகிறேன்.

இப்பொழுது நான் 'M.Phill' படிக்கின்றேன். 'குணமாக்கும் சடங்குகளின் வெளிப்பாட்டு கலைகள்' என்று சங்கீதத்துடன் தொடர்பு படுத்தித் தான் ஆய்வுக்கட்டுரை செய்கின்றேன்.

சடங்குகளைப் பார்க்கின்றபோது, ஆரம்பத்திலே இருந்துதான் எடுக்கின்றேன். அவைதான் சரியான அடையாளத்தினைத் தருகின்றது. இசையினூடாகத் தான் இதைத் தருகின்றது. அதாவது, கோயிலில் தேவாரம் பாடுகின்றோம், தாலிகட்டும்போது மந்திரம் ஓதுகின்றோம், பஜனை செய்கின்றோம் இவைகள் யாவும் இசையினூடேதான் வருகின்றது.

இசையூடாக ஒருவன் உளத்தாக்கத்திற்கு உட்பட்டு அல்லது மனதில் சமநிலை இல்லாதவன் எப்படி சமப்படுத்துவான். இசை வந்து ஒரு மனிதனை ஆளுமையாக்கும், இசை சடங்குகளுக்கூடாக எப்படி வருகிறது என்பது பற்றித்தான் இப்பொழுது நான் ஆய்வு செய்துகொண்டிருக்கிறேன்.

நகரில் சடங்குமுறையானது காணக் கூடியதாக இல்லை. கிராமப்புறங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது. இடம்பெயர்ந்து வெளிநாடு சென்று, பணம் இங்கே வருவதால், மங்கள வைபவங்களை ஆடம்பரமாகச் செய்கின்றார்கள். இது எல்லாம் தேவைதானா? அதாவது, பூப்புனித நீராட்டுவிழா செய்வது, திருமணத்திற்கு பெரியளவில் செலவு செய்வது போன்றன.

யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரையில் சங்கீதம் என்பது ஆரம்பம்போல் இல்லை. சங்கீதம் படிப்பவர்கள் தகுதிச் சான்றிதழுக்காகப் படிக்கின்றார்கள். ஆசிரியர்களும் சோதனைக்காகப் படிப்பிக்கின்றார்கள். ஆசிரியர்கள் சங்கீதத்தினை வியாபாரம் ஆக்குகின்றார்கள். எனது அம்மா சொல்வார் - 'நான் மீண்டும் படிப்பிக்க ஆசையாக இருக்கின்றது. அப்பொழுது தான் எனக்குத் திருப்தி ஏற்படும்' என்று. அதே போல்தான் எனக்கும் சங்கீதத்தினைப் படிப்பிக்கின்றபோது மனதில் ஆறுதல் ஏற்படுகின்றது.

நான் படிப்பிக்கின்ற பிள்ளைகள் - மேடைகளில் ஏறிப் பாடுகின்றார்கள் என்றால், அதில் மேலும் திருப்தி ஏற்படுகின்றது. ஆரம்ப காலத்தினைவிட இப்பொழுது சங்கீதம் படிப்பவர்கள் கூடிக்கொண்டுதான் போகின்றார்கள். ஆனால், ஆர்வம் குறைகின்றது.

நாங்கள் வந்து எங்களின் தரங்களையும், எங்களை நாங்கள் நிறைத்துக்கொண்டால் மற்றவர்களைக் குறைசொல்லக்கூடியநிலை ஏற்படாது. எங்களுக்குள்ளே விஷயம் குறைவாக இருந்தால், எங்களுக்கொரு பயம் இருக்கும்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராக 2001 ஆம் ஆண்டு நியமனமானேன். கல்விச் சான்றிதழ்களுடன் படிக்க வருகின்றவர்களுக்கும், ஒன்றுமேயில்லாமல் படிக்க வருபவர்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. வெ்ளியே இருக்கின்றவர்களிடம் கூடிய திறமை இருக்கின்றது. ஏனெனில், அவர்களை விட இவர்களிடம் ஆர்வம் கூடுதலாக இருக்கின்றது.

நாங்கள் பெரிய வேலைகளில் இருக்கின்றோம். நிறையக் கச்சேரிகள் செய்கின்றோம் என்பதைவிட, எங்களை நாங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். நான் ஆசிரியராக வந்தால் போதும் அல்லது ஒரு கச்சேரி செய்தால்போதும் என்றில்லாமல், கூடப்படிக்கப்படிக்க எங்களுக்கு அறிவுகூடும். எங்களிடம் படிக்க வருகின்ற மாணவர்கள் அறிவும் கூடும். படிப்பிக்கின்றதாலே நாங்களும் நிறைய விடயங்களை அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே, நாங்களும் மாணவர்கள் தான்.

ஒரு நிகழ்ச்சியினை மேடையில் செய்துவிட்டு இறங்கும்போது, கைதட்டலும், பாராட்டும் பெற்றும் - மனதிற்குள் ஒரு குறை இருக்கும். இன்னும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று. இப்படி இருந்தால்தான் நாங்கள் மேலும் முன்னேறமுடியும். வாய்ப்புக்கள் எல்லோருக்கும் கிடைக்கும் என்றில்லை. எப்பவாவது ஒரு தடவைதான் வாய்ப்பு வரும். அந்த நேரத்தைப் பயனபடுத்துவதினால் கண்டிப்பாக எதுவானாலும் கிடைத்துவிடும்.




உண்மையான ஒரு திறமையானவனை அல்லது திறமையானவளைக் கண்டுகொள்ள முடியாதநிலை இருக்கின்றது. ஏனெனில், கிராமப்புறத்தில் ஏழைக்குடிசைகளில் வாழ்பவர்களுக்கு, எந்த வாய்ப்பும் எட்டிப்பார்க்காத நிலையில் ஒருமூலையில் ஒருவன் அல்லது ஒருத்தி வெளிவராமல் இருக்கின்றார்கள். என்னிடம் படிக்கின்ற பிள்ளைகள் பயிற்சியில் கெட்டிக்காரர்கள். ஆனால், பாடத்தில் கவனமில்லை.

இதற்குக் காரணம் வீட்டிலே பொருளாதாரக் கஷ்டம். புல்லுப்பிடுங்கி விட்டு வருகின்றார்கள், பால் வீடுவீடாகக் கொண்டுசென்று கொடுத்துவிட்டு வருகின்றார்கள், களை பிடுங்கிவிட்டு வருகின்றார்கள் என்று இப்படியாகப் பல மாணவர்கள் வருவதால் - பட்டினியாலும், களைப்பினாலும் படிக்கமுடியாதநிலை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட மாணவர்களை ஏதோவொரு வகையில் மேடையேற்றி, தேவாரம் பாடவைத்து அல்லது வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைத்துவிடுவேன். அப்பொழுதுதான் மாணவர்களிடையே துணிவு பிறக்கும்.

நான் முதலாவதாக மேடையேறிய நிகழ்வாக, 1992 ஆம் ஆண்டு சர்வேஸ்வர சர்மா வயலின் வித்துவான் - பாரதிகான சபா என்று ஒன்றினை அமைத்தார். இதில் மாணவர்களும் சேர்ந்திருந்தார்கள். மாதாந்த கச்சேரி, நவராத்திரி விழா நிகழ்வில் கச்சேரி நடைபெறும் சரஸ்வதி விழாவில் முதலாவது கச்சேரி 45 நிமிடம் பாடினேன். சர்வேஸ்வரசர்மா வயலின் வாசித்தார். 2001 ஆம் ஆண்டு Eye ரிவியில் சங்கமம் என்ற நிகழ்ச்சியில் பாடினேன். 2003 ஆம் ஆண்டு கலாவித்தன் பட்டம் பெற்றேன் என்றும், நான் இன்னும் மேலும் மேலும் பரிசுகள் பெறவேண்டும், படிக்கவேண்டும் என்று சொல்லி தனது செவ்வியை முடித்தார்.

**நேர்காணல் - செல்வம்**

# மகப்பேற்றுக் காலத்தில் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

உடல் சுத்தம் பேணி தினமும் குளிப்பது அவசியம். அதிகம் சூடான நீரையும் அதிகம் குளிர்ந்த நீரையும் உபயோகிக்கக்கூடாது.

குளம், குட்டை, குளிக்கும்தொட்டி போன்றவைகளில் நீராடுவதைவிட சுத்தமான கிணற்று நீரில் குளித்தல் நல்லது.

கர்ப்பிணிப் பெண்கள் தம் பற்களைச் சுத்தம் செய்தல் வேண்டும். பற்களைப் பேணாமல் விட்டால் இன்னல்களுக்கு ஆளாகலாம். இதனைத் தவிர்க்க காலை, இரவு இரு வேளைகளிலும் பற்களைத்துலக்க வேண்டும். உணவு உண்ட பின்னரும் வாய் கொப்பளித்துப் பற்களைப் பேணுதல் வேண்டும்.

பற்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அடங்கிய சத்துணவுகளை உண்ண வேண்டும்.

குழிவிழுந்த பற்கள் காணப்பட்டால், அடைத்தும் சொத்தைப்பற்களை மருத்துவரிடம் காட்டியும் சிகிச்சை பெறவேண்டும்.

பட்டுப் புடவைகளையும் கம்பளி வகையான உடைவகைகளையும் அணிவது கர்ப்பிணிக்கு நல்லதல்ல. கனமான நூற்புடவைகளை அணிவது கர்ப்பிணிக்கு உகந்ததல்ல. கனமில்லாத நூற்புடவைகள், மெல்லிய உள்ளாடைகள் அணிவதே உகந்தது.

மிகக்குளிரில் வெளியே செல்ல நேர்ந்தால் மட்டுமே கம்பளி உடைகளை அணிதல் வேண்டும். உள்ளாடைகள் மார்பகங்களை இறுக்குபவையாக இருத்தலாகாது. கையின் இயக்கங்களை கட்டுப்படுத்தும் இறுக்கமான சட்டைகளை அணியக்கூடாது. தொப்புளைச் சுற்றி உள்பாவாடைகளையோ சேலையையோ இறுக்கக்கட்டக்கூடாது.

மென்மையான செருப்புக்களைத்தான் அணிய வேண்டும். உயர்ந்த குதிகால் செருப்பு அணிவது கெடுதலாகும்.

உண்ணும் உணவு, குடிக்கும் நீர் சுத்தமாக இருக்கவேண்டும். சத்துள்ளதாக இருக்க வேண்டும். மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்க கீரை வகைகளையும், பழவகைகளையும் அதிகமாக உட்கொள்ளவேண்டும்.

கர்ப்பிணிப் பெண் உடலுறவு கொள்வது என்பது நித்தம் நித்தம் என்றில்லாமல் உடல் நிலைக்கும் மனநிலைக்கும் ஒத்தவாறு கொள்வது இன்பம் பயக்கும்.

கூடியவரையில் கர்ப்பம்தரித்த ஆறாவது வாரம் முதல் 12 ஆம் வாரம் வரை மிக எச்சரிக்கையுடனும் மிதமான அளவோடும் உடலுறவு கொள்வது நல்லது.

கர்ப்பகாலத்தின் இறுதி மாதங்களில் தாம்பத்திய உறவினைத் தவிர்க்கவேண்டும். கருவுற்றிருக்கும் போது உதிரப்போக்கு சிறிது இருந்தாலும், முன்னைய கர்ப்ப காலங்களின் போது கருச்சிதைவுகள் குறைப்பேறுகள் முதலியன ஏற்பட்டிருந்தாலும் உடலுறவை அறவே நிறுத்த வேண்டும்.



# பிஞ்சுமுகத்தின் தேடல்



மெல்ல அடிமேல் அடி வைத்து பதுங்கியபடி நடக்கிறேன். கையிலே என்ரை பாட்டா செருப்பு. அதைக் காலில் போட்டுக் கொண்டு நடந்தால் சரக்! சரக்! எண்டு சத்தம் போடும். இன்னும் கொஞ்சம் தூரம் தான். நெஞ்சுக்கை ஒரு சின்னப்பயம் தலைதூக்கியது அதற்குள் ஒரு தும்மல் ஓடி வருகிறது. இப்ப தும்மினால் .... போச்சு எல்லோரும் எழும்பி விடுவினம். பிறகு என்ரை திட்டம் எல்லாம் பாழாகிவிடும். சட்டென்று நினைவு வருகிறது. தும்மலை அடக்க வேணுமெண்டால், மூக்குக்குக் கீழை தேய்க்கவேணுமடி! அம்மா தான் சொல்லித்தந்தது.

ஒரு நாள் மாமா வெள்ளை வேட்டி கட்டி வெளுத்த சேட் போட்டு, சின்னச் சூட்கேசுடன் நின்று 'நான் போட்டுவாறன்' எண்டு சொல்லிக்கவும் - நான் நச் ... என்று பெரிதாகத் தும்மவும் கணக்காக இருந்தது. 'சனியன்! தும்மிப்போட்டுது' மாமி பல்லைக் கடித்துக் கொண்டு மழுக்... எண்டு என் தலையில் குட்டினாள். ஐயோ, கருங்கல்லால் அடித்தது போல எனக்குச் சுரீர்... என்று வலித்தது. அண்டைக்குப்போன மாமா பிறகு திரும்பி வீட்டை வரவேயில்லை. மாமி இன்னமும் தேடுகிறாள்.

என்னைக் கண்டால் முழுசியபடி 'சனியன் முழுவியளத்துக்கு உதவாத மூதேவி, தாயையும் தேப்பனையும் விழுங்கிப் போட்டு, இறுமன் போல நிக்குது முண்டம்' அதற்குப்பிறகு அவள் வாயிலிருந்து வரும் சொற்களுக்கு எனக்குப் பொருள் தெரியாது. தூஷணம் பேசாதை எண்டு, சித்தப்பா சொல்லுவார். ஆனால், அதற்குப் பிறகு அவருக்கும் அர்ச்சனை விழும்.

'மாமா வீட்டைபோய் நான் இருக்கவேணும்' எண்டு யார் முடிவு செய்தினமோ எனக்குத் தெரியாது. ஆனால் நேற்றுச் சித்தப்பா தான் சொன்னார். திலகம்! நீ இனியும் இங்கை இருக்க ஏலாது. உன்னை வைச்சிருக்கறதாலை எங்களுக்கு சரியான செலவு. அவர் சொல்லச்சொல்ல எனக்குக் கோபம் வந்தது. மீண்டும் பேசாமல் இருந்தேன். கொஞ்சநாளாக அவற்றை நடவடிக்கைகள் சரியில்லை. என்ரை கையைப் பிடிச்சு நெரிப்பார், கன்னத்திலை கிள்ளுவார். அண்டைக்கொருநாள் நான் கிணத்தடியிலை குளிச்சுக்கொண்டிக்க தூரத்திலை நிண்டு பார்த்துக்கொண்டிருந்தார். நான் மளமள வெண்டு குளிச்சுப்போட்டு ஓடி வந்திட்டன். எனக்கு பார்வை படுமிடமெல்லாம் அரியண்டமாயிருக்கும். மாட்டுக்குப் புல்லுச் செருக்க நானும் என்ரை சிநேகிதி புனிதமும் தோட்டத்துக்குப் போவம். புனித்திற்குச் சித்தப்பாவைப் பற்றிச் சொன்னேன். அவள் உடனே சொன்னாள் - திலகம், நீ இனி அந்த வீட்டிலை இருக்கிறது. ஆபத்தடி, அவள் குரலில் ஒரு பதட்டம். புனிதம் நல்லவடிவு, அவளுடைய தாயும் நல்லவடிவு. அப்பா அவையோடை கோவிச்சுக் கொண்டு எங்கோயோ போட்டராம். இரண்டு மாடு வளர்க்கினம். பாலைவித்துச் சீவியம் நடத்துகினம். புனிதத்தின்ரை அம்மாவுக்குப் பால்காரச் சின்னம்மா எண்டு பட்டப் பெயர்.

புனிதம் சொன்னது சரி, எனக்கு மாமி வீட்டை இருக்கிறது கூடாது எண்டு தெரியுது. ஆனால், எங்கே போறது? வீட்டு வேலையெல்லாம் நான் செய்யவேணும், சிலவேளை எரிச்சலாக இருக்கும். கூட்டுமாறு தேயக் கூட்டுவேன். துணி கிழியும்படி அடிச்சுத் தோய்ப்பேன். பாத்திரங்களைச் சத்தம் போட்டு அடுக்கி வைப்பேன். என் நடி சதிராடுறாய், சனியனை என்ன செய்யிறதெண்டு எனக்கும் தெரியவில்லை? எல்லாம் கொழுப்புத்தான், சித்தப்பாவும் மாமியோடை ஒத்துப்பாடுவார்.

எனக்கு அடக்கமுடியாத சினம் வரும். என்ன செய்யிறது. கைவிரல் நெட்டியைப் படக், படக் எண்டு முறிப்பன. என்னடி தரித்திரம் பிடிப்பாளே நிறுத்தடி, மாமி ஓடிவந்து தலைமயிரைப் பிடித்துத் தாட்டுமுதுகில் ஓங்கிக் குத்தினாள். அப்போது அவளைப் பார்க்க பத்திரகாளிபோல இருந்தது. சித்தப்பா ஓடி வந்து என்னைக் கட்டிப்பிடித்து அணைத்து, கைகளால் நெருக்கிக் கொண்டு அக்கா அவளை விடு, நான் பார்க்கிறன் எண்டு சொன்னார். எனக்கு அவர் கைப்பிடியில் ஆதரவு தெரியவில்லை. வேறை என்னவோ தெரிஞ்சுது. அவரிட்டை இருந்து விடுபடத் திமிறினேன். அவர் இரும்புப்பிடியாக இறுக்கிக் கொண்டு நின்றார்.

மாமி போய்விட்டார் எனக்குப் பளிச்செண்டு ஒரு யோசனை குனிந்து என் அரிப்பற்களால் அவர் கையைப் புளுக்கொடியல் கடிப்பது போல என் பலம் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கடித்தேன். சித்தப்பா ஐயோ! என்ரை கை! எண்டு கத்திக் கையைத் தளர்த்த நான் பிய்த்துக்கொண்டு நிற்காமல் ஓடினேன். காலில் ஏதோ தடுக்கிவிழுந்தேன். என் நினைவு தவறிவிட்டது.

கண்ணைக் கஷ்டப்பட்டுத் திறந்தேன். முதலில் கண்ணில்பட்டது ஒரு சின்னமுகம் தான். என் முகத்தைப் பார்த்துச் சிரிச்சுது. எனக்கு அந்த முகத்தை வணங்கவேணும் போலிருந்தது. அம்மா! அக்கா கண்முழிச்சிட்டா. அந்தச் சின்னக்குரலில் இருந்த மகிழ்ச்சி முகத்தில் பரவிக்கிடந்தது. என்னுடைய கையைப்பற்றியபடி அந்தச் குஞ்சு சொல்லியது அக்கா எழும்புங்கோ, நான் அந்தக்குரலின் அரவணைப்பில் மெய்சிலிர்த்தேன். எழும்பி இருந்தேன்.

எனக்கு முன்னே நின்ற அந்தச் சின்னக் குழந்தையைப் பார்த்தேன். குண்டுக் கன்னங்களும், குமிழம்பழம் போன்று மூக்கும், கருவண்டுக் கண்களும் - பார்க்கப் பார்க்க பரவசமாக இருந்தது. அந்தப் பிஞ்சு முகத்தின் அம்மா கையில், கோப்பையில் உணவு - என்வாயில் நீர்சுரந்தது. எனது கையில் உணவுத்தட்டை அந்த அம்மா தந்தபோது நான் அவருக்குக் கண்கள் இரண்டும் மூடிக்கிடப்பதை உணர்ந்தேன். சின்னக்குஞ்சு அம்மாவைப் பற்றி எனக்குச் சொன்னது. எங்கடை அம்மாவுக்கு கண பார்வை இல்லையக்கா. எண்டாலும் எங்களுக்கு எல்லாம் செய்து தருவா. 'அம்மா சறறுக் கனிவான குரலில் சொன்னாள் துளசி! அக்கா முதலில் சாப்பிடட்டும்.

அந்தக் குரலின் இனிமை என் மனப்புண்ணுக்கு இதமாக மருந்து தடவியது. எனக்கு நல்ல பசி. மளமளவென்று சாப்பிட்டேன். துளசி தண்ணீர் தந்தாள். மடமட வென்று நான் குடிக்கச் சட்டென்று புரையேறியது. துளசி பிஞ்சுக்கையால் என் தலையில் தட்டினாள். மாமியின் குட்டுக்கு முற்றிலும் எதிராக அவள கைத்தட்டல் இருந்தது. என் கண்ணில் நீர் கொப்புளித்தது.

துளசி பதறியபடி என் கைகளைப் பற்றினாள். அது சித்தப்பாவின் கைப்பிடிக்கு முற்றிலும் எதிராக ஆதரவாக இருந்தது. எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. சமாளித்துக் கொண்டு துளசிக்கு நன்றி சொல்ல அவள் சொன்னாள் அக்கா! இதுக்கு நன்றி சொல்ல வேண்டாம். இப்ப உங்கடை கதையைச் சொல்லுங்கோவன். அவள் குரலில் இருந்த பவ்வியம் இவளிடம் என் மனப்பாரத்தை இறக்கி வைக்கவேணும் என்று தோன்றியது. எனது வாய் சொல்லத் தொடங்க - துளசியின் அம்மாவும் எனக்குப் பக்கத்திலை வந்து இருந்தா.


எனக்கு ஆறுவயதில் அம்மா இரண்டு நாள் காச்சலிலே செத்துப்போனாள். அப்பாவை நான் கண்டதேயில்லை. அதனால் அப்பாவின் அக்கா என்னை வளர்த்தார். என் சித்தப்பாவும் அங்கே இருந்தார். மாமியின் குணம் சித்தப்பாவின் குணம் எல்லாவற்றையும் சொல்லி, நான் ஓடி வந்ததையும் சொல்லிமுடித்தேன்.

என் மனம் லோசாகிவிட்டது. ஆனால் துளசியின் அம்மா! அவள் அழவில்லை. ஆனால் முகம் அழுதது. மூடிக்கிடந்த இமைகளைப் பிரிக்க முடியாமல் கண்ணீர் உள்ளே சுரப்பதை நான் கண்டேன். அவவின் கையைப் பற்றினேன்! துளசியும் இன்னொரு கையைப் பற்றினாள். துளசி சொன்னாள் - 'அம்மா! அக்கா எங்களோடை இருக்கட்டும்' அம்மா ஒப்புதல்தர நானும், துளசியும் ஒருவரையொருவர் பாத்துச் சிரித்தோம்.

இப்ப மீண்டும் தும்மல் வந்தது. நச்... ஒரு தும்மல் துளசியின் வாய் சொன்னது நூறு...! மீண்டும் நான் தும்மினேன் நச்... துளியும் இடைவெளி இல்லை. துளசி வாழ்த்தினாள் நூற்றாண்டு! நான் துளசியின் முகத்தைப் பார்த்தேன் மல்லிகைப்பூப்போல இருந்தது. அவள் சொன்னாள் 'என்னக்கா பாக்கிறாய்? நான் உண்மையைச் சொன்னேன். உன்ரை முகம் மல்லிகைப்பூப்போல இருக்கடி' அப்பிடியா! வாங்கோ உங்களுக்கு இரண்டு தாமரைப் பூக்களைக் காட்டுறன்.

அடுத்த அறையில் இரணைக்குழந்தைகள் இருந்து விளையாடிக் கொண்டிருந்தன. எங்களைக் கண்டவுடன் விரைந்து தவழ்ந்து வந்தன. இரண்டு செந்தாமரைப் பூக்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தன.

என்மனம் பொறுக்கவில்லை. ஐயோ! இந்தப் பட்டு முழங்கால்கள் தேயப் போகிறதே? எதிர்கொண்டு நான் போய் இரண்டையும் கைகளால் அணைத்தேன். செந்தாமரைப்பூவின் மணம் என்னைத்தழுவ, துளசியும் அருகில்... பூஞ்சோலையில் நின்றேன் நான்.



தூரத்தே ஒரு பெயர்ப் பலகை என் கண்ணிகளில் பட்டது. 'அன்புச் சோலை' என்ற பெயர் என்னைக் கவர்ந்தது.

◆

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# அழகுக்கலையால் வீட்டில் இருந்தபடியே சம்பாதிக்கலாம்

பணம் அதிகமாய் முதலீடு செய்தாலும், பல தொழில்களில் நட்டம் தான் ஏற்படுகின்றது. ஆனால், அழகுக்கலையைப் பொறுத்தவரைக்கும் முதலீடு குறைவு. வருமானமோ நிறையவே கிடைக்கின்றது.

இதில் இன்னொரு விடயமும் உண்டு. அழகுக்கலைகளைக் கற்றுக்கொள்ள எந்தவித கல்வித்தகுதியோ, வயது வரம்போ கிடையாது. சிறிதளவு கலை உணர்வில் ஈடுபாடுள்ள பெண்கள் இந்தத் துறையில் எளிதாக வெற்றி பெறமுடியும்.

பெண்கள் அழகுக்கலை கற்பதானால், வீட்டில் இருந்தபடியே சம்பாதிக்க முடியும். அழகுக்கலையின் அவசியங்கள் பற்றிப் பார்க்கும்போது, பெண்கள் பலர் குழந்தைகளுடன் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டு எப்படி வேலைக்குப் போவது? வீட்டிலிருந்து கொண்டு சம்பாதிக்கத்தான் என்னவழி என்று சிந்தனையில் மூழ்குவதுண்டு. இனி அந்தக் கவலையே உங்களுக்குத் தேவையில்லை.

அழகுக்கலையை பயின்றவுடன் வீட்டிலேயே ஒரு சிறிய அறையில் அழகுக்கலை நிலையத்தை அமைத்துக் கொள்ள முடியும். அக்கம் பக்கத்து பெண்களுக்கு மட்டுமே செய்தாலே ஓரளவு சம்பாதிக்க முடியும்.

அழகுக்கலை என்றதும் அது மிகப்பெரிய வித்தை நமக்கெல்லாம். வரவே வராது என்று நினைக்கக்கூடாது. அழகுக்கலை பயில ஓரளவு அழகுணர்ச்சியும் ஆர்வமும் இருந்தாலே போதும். இதனால் பெண்கள் நல்ல வருமானம் ஈட்டக்கூடிய பயிற்சிகளை கற்றுக்கொள்ளமுடியும்.

அவை எவ்வாறான அழகுக்கலைப் பயிற்சி என்பதை பார்த்தால், முக ஒப்பனை , தலைமயிர் பல்வேறு வடிவங்களில் வெட்டுதல், கூந்தல் அலங்காரம், கண்ணிமை சீராக்குதல், நகைகளால் கூந்தலை அலங்காரம் செய்தல், இது தவிர முகப்பருவை அகற்றுதல் கழுத்திலுள்ள மரு, கண்ணுக்குகீழ் இருக்கும் கருவளையத்தினை நீக்குதல், அரேபிய மற்றும் ராஜஸ்தானிய முறையில் விதம்விதமான வடிவங்களில் மருதாணி போடுவது, முடி உதிர்வைத்தடுக்கும் மூலிகைச்சிகிச்சை, வலி இல்லாமல் நவீன கருவி மூலம் தங்கம், வெள்ளி, முத்து முறைகளில் முக ஒப்பனைகள், கூந்தலுக்கு டை அடிப்பது என்று அழகுக்கலையில் அடுக்கடுக்கான பயிற்சிகள் உள்ளன.

கூடுதலாகக் கூந்தலுக்கு கலர் டை அடிப்பது பற்றியும், முகத்திற்கேற்ப கூந்தல் அலங்காரம் உருவாக்குவது பற்றியும், முக ஒப்பனை பற்றியும் கற்றுக்கொண்டால், விதவிதமான நவநாகரிகமுறையில் மணப்பெண்ணை அழகுபடுத்துவதன் மூலம் இன்னும் கூடுதலாக சம்பாதிக்க முடிகிறது.

நீங்கள் அழகுக்கலை நிலையங்களில் கற்க விரும்பினால் அது அரசு அங்கீகாரம் பெற்றதா என்பதை கவனிப்பது நல்லது. அரசு அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் கற்பதால் வங்கிகளில் கடன் வசதி பெறமுடியும். இது நிரந்தர வருமானம் ஈட்டக்கூடிய துறையாக இருப்பதனால் எளிதில் கடன் கிடைத்து விடுகிறது.

அதனால்தான் தற்போது எங்கு பார்த்தாலும் அழகுக்கலை நிலையங்கள் தோற்றம் பெற்றுவிட்டன. அழகுக்கலையை பயின்றுவிட்டால், இளம் பெண்களைக் கவர சில ஆலோசனைகள் பற்றிப் பார்ப்போம்.

உங்களிடம் அழகுபடுத்தவரும் பெண்களின் விருப்பப்படிதான் அழகுபடுத்த வேண்டுமே தவிர, உங்கள் விருப்பத்தை திணிக்கக்கூடாது. இது வாடிக்கையாளர்களின் மனதில் எரிச்சலைக்கிளப்பும்.

நீங்களும் அழகுபடுத்திய பிறகு, வாடிக்கையாளர்களுக்கு திருப்தி ஏற்பட்டுள்ளதா? என்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. திருப்தி இல்லை என்றால், மனம் கோணாமல் மீண்டும் அவர்களை அழகுப்படுத்த வேண்டும்.

ஒரேநேரத்தில் வாடிக்கையாளர்கள் நிறையப்பேர் வந்துவிட்டால், அவசரம் அவசரமாக முடி வெட்டவோ, இமை வழிக்கவோ கூடாது. அழகுக்கலை செய்யும் போது கூடுதலான நேரம் எடுத்து பொறுமையாகச் செய்யவேண்டும். அப்போதுதான் வாடிக்கையாளருக்கு திருப்தி ஏற்படும். இல்லையென்றால் அவர்கள் ஒரு தடவையோடு சரி அடுத்து உங்கள் அழகுக்கலை நிலையப்பக்கமே எட்டிப்பார்க்க மாட்டார்கள்.

சில பெண்களுக்கு முகத்தில் சில கிறீம் பயன்படுத்தினால் ஒவ்வாமை ஏற்படும். அதனால், புதிதாக அழகுக்கலை நிலையங்களுக்கு வரும் பெண்களுக்கு கிறீம் ஒத்துக் கொள்கிறதா என்பதைப் பார்ப்பது அவசியம்.

கூந்தலைப் பொறுத்தவரைக்கும் உங்களுக்கு முகத்திற்கேற்ற கூந்தலை உருவாக்கத் தெரிந்திருக்கவேண்டும். தெரியவில்லை என்றால், உங்கள் வாடிக்கையாளரின் போட்டோவை கணினியில் ஸ்கான் செய்து, முகத்திற்கேற்ற கூந்தலை தேர்வு செய்து அழகுப்படுத்தலாம். அழகுப்படுத்திக் கொண்டிருக்கும்போதே முகத்தை - உம் என்று வைத்திராமல் கலகலவெனப் பேசுங்கள்.

இடையிடையே அழகுக்கலை சம்பந்தமான ஆலோசனைகளைச் சொல்லிக்கொண்டே இருங்கள். பணம் சம்பாதிப்பது மட்டும் தான் முக்கியம் என்று கருதாமல், நல்லமுறையில் வாடிக்கயைாளருக்கு புதுவிதமான அலங்காரங்களைப் செய்யலாம்.

அழகுபடுத்த வரும் பெண்களை வாடிக்கையாளர்களாக கருதாமல் தோழிகளாக்கிக் கொள்ளுங்கள். அழகுக்கலை பற்றி உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் தைரியமாக வேறு அழகுக்கலை நிபுணர்களை சந்தித்து சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

**நீங்களும் சுயமாக சம்பாதித்து வாழ்க்கையில் முன்னேற என்னுடைய வாழ்த்துக்கள்.**

# இந்த வார பலன்கள்

## 12.03.2004- 18.03.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சுக் | சுக் ராகு | செவ் | சனி |
| சூ. யுரே | 13 பி.கு 3.31 தனு-சந்<br>14 கா 10.03 மீன-சூரி | | |
| நெப் | 15 மா 6-42 மக-சந்<br>18 ப. 10.43 கும் - சந் | | குரு |
| | சந் | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில்துறை நன்றாக இயங்கும். தொடங்கும் தொழில்கள் நன்கு பலிதமாகும். செல்வாக்கு, அந்தஸ்துநிலை மேலோங்கும். கடன் தொல்லைகள் இருப்பின் அவை தீரும். தசாபுத்தி பலன் நன்றாக இருந்தால், தூரதேசப் பிரயாண வாய்ப்புக்கள் கிட்டும். திருமணப் பேச்சுக்கள் சம்பந்தமான முயற்சிகள் கைகூடத்தக்க நிலையில் இருக்கும். தனித்தொழில் செய்பவர்களுக்கு சிறப்பும், முன்னேற்றமுமுண்டு. உத்தியோகத்தினர் தமது பணிகளைச் சிறப்பாக நடத்துவர். சிலருக்கு தொழில் மாற்றங்கள்கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு சாதகமான காலம். விற்பனை நன்கு நடக்கும். மாணவர்கள் கல்வியில் சித்தியடையக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசிகாரர்களுக்கு தொழில் முயற்சிகள் சுமாராகவே இருக்கும். பணக்கஷ்டம் ஏற்பட்டாலும் ஓரளவு சமாளிக்கலாம். பணம் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். குடும்பத்தில் கருத்துவேறுபாடு காரணமாக அடிக்கடி சச்சரவுகள் தோன்றக்கூடும். உறவினர், நண்பர்களின் உதவியும், மன ஆறுதலும் உண்டு. தொடங்கும் கருமங்கள் நிறைவேறுவதில் பல இடைஞ்சல்கள் ஏற்படும். குடும்பப் பெண்கள் சகல விஷயங்களிலும் அவதானமாக நடக்கவும். திருமணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஓர் திருப்புமுனை தென்படும். காதல் விவகாரங்கள் வெற்றிதரும் உத்தியோகத்தர்களுக்கு வேலை அதிகமாக இருக்கும். சகதொழிலாளருடன் போட்டிகள் ஏற்படலாம். வியாபார நடைமுறைகள் மந்தமாகவே இருக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவு.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இவர்களுக்குத் தொழில் முயற்சிகள் குறைவாகவே பலனளிக்கும். வருவாய் நினைத்தவாறு கிடையாது. குடும்ப நிலையைப் பொறுத்தமட்டில் மனவேதனையும், துன்பமும் அதிகமாகும். செலவுகளைச் சமாளிப்பதில் வெகு சிரமம் காட்டும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல் நன்று. விவாகப் பேச்சுக்கள் நிறைவேறாமல் தள்ளிக்கொண்டு போகும். பிற நாட்டுப் பிரயாணத்தை விரும்புபவர்களுக்கு கருமம் தோல்வியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். மறைமுக எதிரிகளாலும் கஷ்டம் ஏற்படலாம். உயரதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். வியாபாரம் மந்த நிலையைக் காட்டும். கடன் பணத்தை வசூல் செய்வது கடினம். மாணவர்களுக்கு கல்வியில் அதிக சிரத்தை வேண்டும். ஏனைய விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியினருக்கு தொழில் சிறப்பாக இயங்கும். பணவருவாயும் தாராளமாகக் கிடைக்கும். வீட்டில் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியும் குதூகலமும் காணலாம். கடன்தொல்லைகள் இருப்பின் அவை நீங்கும். இனத்தவர்களின் வருகையால் சந்தோஷம் ஏற்படும். வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்பட இடமுண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். திருமணப் பேச்சுக்கள் வெற்றிதரக்கூடிய காலமாகும். காதல் விவகாரங்களிலும் ஈடுபாடு அதிகரிக்கும். அரச உத்தியோகத்தர்களுக்கு பலவித முன்னேற்ற பலன்களுண்டு. சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். சொந்தமாகத் தொழில் செய்வோர் கூடிய நன்மைபெறுவர். மாணவர்களுக்கு சிறப்பும், முன்னேற்றமும், கௌரவமும் உண்டாகும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு செய்தொழில் முன்னேற்றமடையும். வருவாயும் நிறைவாகக்கிடைக்கும். சமூகப் பணிகளில் ஈடுபட்டவர்கள் நன்கு மதிக்கப்படுவர். குடும்பத்தில் பல சிறப்புக்களும், புத்திரர்களால் மகிழ்ச்சியும் ஏற்படலாம். தேக சௌக்கியம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடையவர்களாகக் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் விரைவில் அனுகூலமாகும். குடும்ப வாழ்க்கை சிறப்படைய இடமுண்டு. உத்தியோகத்தினர் சிறப்பாகப் பணியாற்றி உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பொருள்சேரும். மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியும், உயர்ச்சியும் அடைவர். சிலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க இடமுண்டு.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் ஓரளவு நன்றாக இருப்பினும், அதற்கேற்ற வருவாய் கிடையாமற்போகும். குடும்பத்தில் சிறுசச்சரவுகளும், இனசன பந்துக்களால் குழப்பமும் ஏற்படலாகும். செலவுகள் வரவை மிஞ்சிநிற்கும். தொடரும் கருமங்கள் இழுபறி நிலையில் இருக்கும். தேகசுகமும் இடையிடையே பாதிப்படையலாம். பணவிஷயத்தில் அவதானமாக நடந்துகொள்ளவும். திருமணப் பேச்சுக்கள் தடைப்பட்ட வண்ணம் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் மாற்றங்கள் ஏற்படலாம். உயரதிகாரிகளை திருப்திப்படுத்துவது கடினம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். மாணவர்கள் சுகக்குறைவால் தமது கல்வியைத் தொடரமுடியாமல் இருப்பர்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிகாரர்களுக்கு சமபலனே நடக்கும். தொழில், வருவாய் நன்றாக இருப்பினும், குடும்பத்தில் அமைதி குறைவாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் மிகப்பிரயாஷையின் பின்பே நிறைவேறும். புத்திரர்கள், நண்பர்களால் உதவியுண்டு. குடும்பப் பெண்கள் திருப்தியற்ற வாழ்க்கையை வாழநேரிடும். திருமணம் சம்பந்தமான நிகழ்ச்சிகள் காலதாமதத்தை ஏற்படுத்தும். எல்லாக்கருமங்களிலும் அலைச்சல் பிரயாசை இருந்துகொண்டிருக்கும். உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்புகள் அதிகமாகும். பணிகளைச் சரியாக நிறைவேற்ற முடியாத உடல்நிலை இருக்கும். வியாபாரம் நன்றாக நடப்பினும், பணச்செலவு அதிகமாகவே இருக்கும். புதிய முதலீடுகளுக்கு ஏற்றகாலம் இல்லை. மாணவர்கள் வீண் வாக்குவாதத்தில் காலத்தைக் கழிப்பர். சகமாணவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



இவர்களுக்கு செய்தொழிலில் பல கஷ்டங்கள் இருக்கும். பணவருவாய் மிகக்குறைவாகவே கிடைக்கும். இதனால் குடும்பச்செலவுகளை சமாளிப்பது கஷ்டம். புத்திரர்களால் தொல்லையும் செலவுகளும் ஏற்படும். இடையிடையே சுகக்குறைவுகளும், மருத்துவச் செலவுகளும் ஏற்படும். குடும்பப் பெண்கள் மன விரக்தியுடன் காணப்படுவர். புதிதாக எத்தொழிலையும் ஆரம்பிக்காமல்விடுவது நன்று. தொடங்கிய கருமங்களை நிறைவுசெய்வதே கடினம். திருமணப்பேச்சுக்களில் தோல்விகளைச் சம்பாதிக்க நேரிடும். உத்தியோகத்தர்கள் இடமாற்றத்தால் கஷ்டமடைய நேரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக இராது. வங்கி உதவிகள் கிடைப்பது கஷ்டம். மாணவர்களுக்கு கல்வியில் நிறைந்த ஊக்கம் தேவை.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியினருக்கு தொழில் முயற்சி படிப்படியாக முன்னேறும். பணவருவாயும் நன்றாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிலவும். இனபந்துகள், பிள்ளைகள், நண்பர்கள் ஆகியோரிடமிருந்து உதவிகள் கிடைக்கும். முன்பிருந்த கஷ்டங்கள் மெல்லமெல்லக் குறையும். தேகசுகம், குடும்ப சுகம் நன்றாக அமையும். திருமணப்பேச்சுக்கள் விரைவில் கைகூடி மகிழ்ச்சியான வாழ்க்கை கிட்டும். அரசியற்துறையினருக்கு சாதகமான பலனைக்கொடுக்கும். உத்தியோகத்துறையில் உள்ளோருக்கு வசதியான இடமாற்றங்களும், சிறப்பும் உண்டு. சிலருக்கு உத்தியோக உயர்வு கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு கூடுதலான இலாபம் கிடைக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம், உயர்ச்சி, செல்வாக்கு உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் கைகூடலாம்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர இராசிக்காரர்களுக்கு சகலதுறையிலும் அலைச்சல் கூடுதலாக இருக்கும். மிகவும் பிரயாஷைப்பட்டே பணம் சம்பாதிக்க வேண்டும். குடும்பத்தில் பொறுப்புக்களும் மனத்தாங்கல்களும் அதிகமாக இருக்கும். சகோதரர்களால் தொல்லைகள் ஏற்படலாம். காணி சம்பந்தமான வழக்குகள் ஏற்பட இடமுண்டு. தேக ஆரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவும் அதிகமாகும். குலதெய்வ வழிபாடுகளால், ஓரளவு சாந்தி உண்டாகும். வீணான செலவுகளைத் தவிர்க்கவும். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் காலவரையறையின்றி தள்ளிப் போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். ஏனையோரின் ஒத்துழைப்புடன் அவதானமாகச் செயற்படவும். வியாபாரம் நஷ்டத்திலேயே நடக்கும். புதிய முதலீடுகளுக்கு பணவசதி இராது. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் குறைவாகவே இருக்கும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியினருக்கு கிரக சஞ்சாரங்கள் நன்மையான பலன்களையே தரும். தொழிற்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் பிரச்சனை எதுவுமின்றி மகிழ்ச்சியாக இருக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், முன்னேற்றமும் உண்டு. தொடரும் கருமங்கள் விரைவில் இனிதாக நடைபெறும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு திருமணப் பேச்சுக்கள் சற்றுத் தாமதமானாலும் விரைவில் நல்லமுறையில் அனுகூலமாகும். தனித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கூடிய லாபம் பெறுவர். உத்தியோகத்தினர் தொழில் முன்னேற்றம், ஊதிய உயர்வு என்பன பெறுவர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகம் பலனளிக்காவிட்டாலும், நஷ்டம் ஏற்படாது. ஆடம்பரப்பொருட்களை விற்பனை செய்பவர்கள் கூடிய இலாபம் பெறுவர். மாணவர்கள் அவதானத்துடன் நடந்தால் முன்னேற்றம் உண்டு.

### மீனம்


*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீன ராசிக்காரர்களுக்கு நன்மை தீமை கலந்த பலன் நடக்கும். தொழில், முன்னரிலும் பார்க்கச் சிறப்பாக இருக்கும். பணவருவாய் தேவைக்கேற்ப கிடைக்கும். இனபந்துகளிடையே சிறுசச்சரவுகள் ஏற்படலாம். வெளிநாட்டிலிருந்து பண உதவிகள் கிடைக்கும். தூரதேசப் பிரயாணத்தை எதிர்நோக்குவோருக்கு காலதாமதம் ஏற்படும். திருமணப்பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும். தனியார் ஸ்தாபனத்தில் தொழில்புரிவோருக்கு முதலாளியின் நல்லெண்ணம் கிட்டும் அரசாங்க உத்தியோகத்தினருக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பாக அமையும். பணம் சேரும்.மாணவர்களுக்கு கல்வித் தகமை நன்றாக இருக்கும். ஆசிரியரின் பாராட்டுக்கள் உண்டு.

# பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண கூட்டமைப்பினரை ஆதரியுங்கள்!

## கூட்டமைப்பு வேட்பாளர் சிவமகாராசா



கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்பினருக்கு வழங்கிய ஆதரவு இம்முறை குறையுமாக இருந்தால் - தமிழ் மக்களின் சுதந்திர தாகம் குறைந்துவிட்டதாக, சர்வதேச சமூகத்தினால் கருதப்படும் இந்த விடயத்தை எமது மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சி.சிவமகாராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அளவெட்டி வடக்கு ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர்இதனைத் தெரிவித்தார். சனசமூக நிலையத் தலைவர் ச.தனராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்தமுறை நடைபெறவுள்ள தேர்தல் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கோ, அல்லது கட்சிகளுக்கான தேர்தலோ அல்ல எனவே, தமிழ் மக்கள் ஆழமாக சிந்தித்துச் செயற்பட வேண்டும். இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களாகிய நாம் பல உரிமைப் போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறோம்.

அமைதிப் போராட்டம், சட்ட மறுப்புப் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் எனப் பல போராட்டங்களை நடத்தினோம். ஆனால், இவை எவற்றிற்கும் சிங்களப் பேரினவாத அரசுகள் செவிசாய்க்கவில்லை. அதற்கு மாறாக, காலத்திற்கு காலம் எமது தமிழ்த் தலைவர்களினால் சிங்கள அரசுகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் கிழித்தெறியப்பட்டன. தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

ஆனால் தற்போது நிலமை மாறி எமது பிரச்சினை தொடர்பாக சிங்களத் தலைமை சிந்திக்கத் தொடங்கியுள்ளது. ஏனெனில், எமது இளைஞர்கள் ஆயுத முனையிலே, நிர்ப்பந்தத்தின் பேரிலேயே ஆயுதம்ஏந்தினார்கள். அவர்களுடைய ஆயுதப் போராட்டம் தமிழ்மக்களுடைய இராணுவபலத்தையும், ஆயுதபலத்தையும் சர்வதேசத்திற்கு உறுதிப்படுத்தியுள்ளது.

ஆயுதப் போராட்டத்தால் புலிகளை அழிக்க முடியாது என்பதை அரசாங்கம் நன்றாகப் புரிந்துள்ளது. அதனாலேயே தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆனால் இதன் முக்கிய விடயமான இயல்பு வாழ்க்கை என்பது இன்றும் தோற்றுவிக்கப்படவில்லை.

தமிழ்மக்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வு காணப்படவில்லை. அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களில், தமிழ் மக்களுக்கு எதுவும் உரிய முறையிலே வழங்கப்படாமையால், விடுதலைப்புலிகள் ஒரு தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளனர். இதனை சர்வதேசச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தவேளையிலே தமிழ்மக்கள் அனைவரும் புலிகளின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு, உறுதியாக நிற்கிறார்கள். என்பதை உலகிற்குக் காட்டவேண்டிய தேவையுள்ளது. அதனை எடுத்துக்காட்ட இந்தப் பொதுத்தேர்தல் நல்லதொரு சந்தர்ப்பம். அதனை அனைவரும் சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

எமது எதிர்கால சந்ததியினரின் தனி வாழ்வுக்காக இந்த அரிய பணியை நாம் செய்தேயாகவேண்டும். எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் எஸ்.சாம்பசிவம், தெல்லிப்பழை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி.தனபாலசிங்கம், ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர் வை.சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

பெருமளவான மக்கள் திரண்டிருந்த இந்தப் பிரசாரக் கூட்டத்தில் - விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினரின் வெளியீடான 'உப்பில் உறைந்த உதிரங்கள்' எனும்திரைப்படமும் காண்பிக்கப்பட்டது. (94)

## கச்சதீவு ஆலய நவநாள் திருவிழா

சரித்திரப் பிரசித்திபெற்ற கச்சதீவு அந்தோனியார் தேவாலய வருடாந்த நவநாள் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி. 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைவரை நடைபெறவுள்ளது.

இதற்காக நேற்று முன்தினம் முதலே, குருநகர் இறங்குதுறை ஊடாக பிரயாணிகளை படையினர் அனுமதித்து வருகின்றனர்.

இதேவேளை, வன்னிப் பகுதிகளில் இருந்து பாலாவி, பள்ளிக்குடா, நாச்சிக்குடா, வலைப்பாடு ஆகிய பிரதேசங்களில் இருந்து மக்கள் பாலைதீவை வந்தடைந்தனர்.

## குருநகரில் ஈ.பி.டி.பியினர் தேர்தல் பிரசாரத்தில்

ஒலிபெருக்கி பூட்டிய வாகனங்களில், நேற்றுமுன்தினம் ஈ.பி. டி.பி.யினர் குருநகரில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டனர். அவர்களின் வாகன அணிக்கு ஆயுதம் தரித்த படையினர் பாதுகாப்பு வழங்கிச் சென்றனர். சில இடங்களில் தரித்து துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினர். (206)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 10 மணிக்கு வாணர் விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது

பாடசாலை அதிபர் கே.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து*
*சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு.*
திருக்குறள்

# நமது நோக்கு

## தேர்தலும், தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையும்...

பொதுத்தேர்தலுக்கு இன்னமும் சரியாக மூன்று வாரங்கள் மட்டுமே உள்ளநிலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தமது வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை எவ்வாறு முழுமையாகப் பயன்படுத்துவது என்ற கேள்விக்கு இன்னமும் ஓர் தீர்க்கமான - தெளிவான பதிலை அரசாங்கம் முன்வைக்கவில்லை.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள், கடந்த இருதசாப்தகாலத்தின் பின்னர் ஒரு நாடாளுமன்றத் தேர்தலில் தமது வாக்குகளை முதன்முறையாக, முழுமையாக பயன்படுத்த விருப்பார்வம் கொண்டுள்ள நிலையில் அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க விடுதலைப்புலிகள் தமது முழுமையான ஒத்துழைப்பினை சாத்தியமான சகல வகையிலும் வழங்கத் தயாராக உள்ளநிலையில், அரச தரப்பில் அதற்கான முயற்சிகள் சாதகமான முறையில் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

யாழ்.குடாநாட்டு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிவாக்காளர்களும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வாக்காளர்களும், தமது வாக்குகளை முழுமையாக அளிப்பதற்கு வசதியாக முகமாலை சோதனை நிலையப்பகுதியில் உள்ள தங்களின் முன்னரங்கக் காவல்நிலைகளை 500மீற்றர் தூரம் பின்னகர்த்தி அவர்களை இராணுவ சூனியப் பிரதேசத்தில் வாக்குரிமையை பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தத் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்ததுடன், அப்பகுதியில் சர்வதேச கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையுடன் வாக்களிப்பு மையங்களை நிறுவவும் ஒத்தாசை புரிவதாக நோர்வேயின் விசேடதூதர் மூலமாக தமது நிலைப்பாட்டை தெரிவித்துமுள்ளனர்.

விடுதலைப்புலிகளன் இந்த அறிவிப்பும், ஆலோசனையும் அர்த்தமுள்ளவை மட்டுமல்ல சாத்தியமாக்கக்கூடிய தன்மை கொண்டவையுமாகும். இதில் பாதுகாப்பு பிரச்சினையுட்பட எந்தவிதமான சிக்கலும் ஏற்படவாய்ப்பில்லை என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றுமாகும்.

இதன்மூலம் நீதியானதும், சுதந்திரமானதுமான வகையில் குடாநாடு மற்றும் கிளிநொச்சி மாவட்டமக்கள் முழுமையாக தமது வாக்குகளை இந்தத் தேர்தலில் அளிப்பதற்காக அரசு மேற்கொள்ளும் சகல ஏற்பாடுகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது ஆதரவை அளிக்கத்தயாராக இருப்பதாக உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.

அவர்கள் எதிர்பார்ப்பதும், கோரிக்கை விடுப்பதும் அம்மக்கள் இராணுவ சோதனை நடவடிக்கை என்ற பெயரில் காலதாமதம் செய்து அவமதிக்கப்படக்கூடாது என்பதேயாகும். அதற்காகவே அங்கு சர்வதேச கண்காணிப்பாளர்களைத்தவிர வேறு பொலிஸாரோ அல்லது இராணுவமோ அங்கு இருக்கக்கூடாது என்று கூறப்படுகிறது.

நடுநிலைபேணும் பொதுதன்மை கொண்டவர்களான சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் பிரசன்னம், தேர்தல் மோசடிகளை மட்டுமல்ல சுதந்திரமான வாக்களிப்புக்கு எதிரான கெடுபிடிகளையும் தவிர்த்துவிடும் என்பதே உண்மையாகும்.

இராணுவம் கூறுவது போன்று அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாக்களிப்பு மையங்களை அமைத்து, அங்கு வழமையான சோதனை நடவடிக்கைகளின் பின்னர், மக்களை வாக்களிக்க அனுமதிக்கலாம் என்ற அவர்களின் யோசனை மூலம் பல்லாயிரக்கணக்கிலான மக்கள் ஒருசில மணிநேரத்தினுள் வாக்களிப்பதென்பது சாத்தியமேயில்லை.


இது இந்த மக்கள் முழுமையாகத் தங்களின் வாக்குகளை அளிக்கவிடாது தடுக்கும் ஜனநாயக விரோத செயற்பாடாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் சட்டவிதிமுறைகளை மீறி - பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்புக்கள் ஏதுமின்றி வங்கிகளை இயக்கலாம, பரீட்சைகளை நடாத்தலாம் என்றால் பொதுத்தேர்தலை ஏன்நடத்த முடியாது என மக்கள் மத்தியில் எழுப்பப்படும் வினாவுக்கு விடையளிக்க அரசால் முடியாது என்பதே உண்மை.

இரண்டாண்டு காலத்திற்கும் மேலாக சமாதான சூழல் தொடர்ந்துவரும் வேளையில், சமாதானத்தினது பெறுபேறாக இதுவரையில் தமிழ்மக்கள் எந்தவிதமான பெரிய நன்மைகளையும் பெறாதநிலையில் அவர்களுக்கான வாக்களிக்கும் உரிமையையும் பாதுகாப்பு என்ற அர்த்தமற்ற காரணத்தை முன்வைத்து மறுக்கவோ, கட்டுப்படுத்தவோ இராணுவத்தின் கோரிக்கை மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் அரசு முயலுமேயானால், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் எதனையும் இலங்கை அரசுகள் எதுவும் அங்கீகரித்து மதிப்பளிக்கும் நாகரீகத்தை உடையதாக இல்லை, என்பதையே அது உலகிற்கு உணர்த்துவதாக இருக்கும்.

எனவே சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகம், தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமைக்கு முழுமையான உத்தரவாதம் அளித்து அதற்கான இயல்பான சூழலை உருவாக்கத் தேவையான அழுத்தத்தை அரசுக்கு அளிக்கத் தவறின், எதிர்கால சமாதான முயற்சிகள் மீது தமிழ்மக்கள் முழுமையாக நம்பிக்கையை இழப்பதுடன் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறைகளிலும் சந்தேகத்தை ஏற்படுத்தவைக்கும் என்பதில் ஐயமில்லை.

## நாடும் நடப்பும்




செய்தி:- கிழக்கில் எழுந்துள்ள பிரச்சினையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி பிரதேசவாதத்தை கட்டவிழ்த்து தமிழ்த்தேசியத்தை குழப்ப அந்நிய மற்றும் தீய சக்திகள் தீவிரமுயற்சி

# கலட்டி மற்றும் அரியாலைப் பிரதேசங்களில் உள்ள வெடிபொருளகற்றப்பட்ட பகுதிகள் மக்கள் பாவனைக்கு

வெடிபொருள் அகற்றப்பட்டுள்ள கலட்டி மற்றும் அரியாலைப் பிரதேசங்கள் அடுத்தவாரம் பொதுமக்கள் பாவனைக்கு விடப்படும் என யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பலபகுதிகள் மக்கள் பாவனைக்காக வெடிபொருள் அகற்றப்பட்டு அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலேயே இவ்விருபகுதிகளும் விரைவில் மக்கள் பாவனைக்கென விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் கட்டடம் உள்ள அரியாலைப்பகுதி, திறந்த பல்கலைக்கழகமும் குடிமனைகளும் அமைந்துள்ள கலட்டிப்பகுதி என்பன அடுத்தவாரம் முதல் மக்கள் பாவனைக்கு விடப்படுவதானது யாழ்.மக்களுக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கோப்பாய், நுணாவில் பகுதிகளில் வெடிபொருள் அகற்றப்பட்ட பிரதேசம் அந்தந்தப்பிரிவு உதவி அரசாங்க அதிபர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

ஹலோ டிரஸ்ட் வெடிபொருள் அகற்றும் பிரிவினரால் வெடிபொருள் அகற்றப்பட்ட இப்பகுதிகளை நேற்றுக்காலை 11 மணியளவில் யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலக அதிகாரிகள் உதவிஅரச அதிபர்களிடம் ஒப்படைத்தனர். இந்நிகழ்வில் அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள், மற்றும் அதிகாரிகளும் வெடிபொருளகற்றும் பணியில ஈடுபடும் நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டடனர்.

## சுயநிர்ணய அடிப்படையில் தான் தேர்தல் பிரகடனம் வெளிப்பட்டுள்ளது

**கூட்டமைப்பு வேட்பாளர் சிறில்**



இலங்கை நாடாளுமன்றமானது, எமது தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்டுத்தரும் என்று நாம் எண்ணவில்லை. அதற்கு யாரும் உத்தரவாதம் தர முடியாது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்வதனால் தான் முடியும். இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பின் வேட்பாளர் சொலமன் சூ.சிறில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்விவலயத்தில் பிரதிக்கல்விப்பணிப் பணிப்பாளர் வ.வரதராசா தலைமையில் நடைபெற்ற அரசியல் களம் என்ற ஆய்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்பதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை நாடாளுமன்றம் செல்வதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கான மக்கள் ஆதரவை வெளிப்படுத்த முடியும்.

ஐ.நா. பிரகடனங்களில் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு உண்டு. இந்த சுயநிர்ணய அடிப்படையில்தான் எமது தேர்தல் பிரகடனமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு வாக்களிப்பதன் மூலம்தான் உலக நாடுகள் எமது போராட்ட உண்மைத் தன்மையை உணர்ந்து சர்வதேசம் அங்கீகரிக்கும். என, அவர் தெரிவித்தார்.

## மக்களைக் குழப்பிவரும் அரசாங்க ஊடகங்கள்!

**சந்திரநேரு குற்றச்சாட்டு**

தற்பொழுது மட்டு - அம்பாறைப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திப் பல பொய்யான செய்திகளை வெளியிட்டு மக்களைக்குழப்பி ஆதாயம் தேடும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் முனனின்று உழைத்து வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திகாமடுல்ல வேட்பாளர் அரியநாயகம் சந்திரநேரு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோவிலில் நடைபெற்ற பேரணியில் தேசியத்தலைவரின் படம், கொடும்பாவி என்பன எரிக்கப்பட்டதாக செய்தியை திரிவுபடுத்தி எங்கோ நடைபெற்ற சம்பவத்தையும் எனது படத்தையும் அடிக்கடி ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் ஒளிபரப்புச் செய்யப்பட்டது எனக்கு வேதனையளிக்கிறது.

நாங்கள் ஒற்றுமையாக இருப்பதனை பல ஊடகங்கள் உடைத்தெறிய முன்னின்று உழைத்துவருகின்றன எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் தொடர்பான பயிற்சி யாழ்.செயலகத்தில் நடைபெற்றது!

தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட காணி மற்றும் பிறப்பு அத்தாட்சிப்பதிவாளர்களும், மாவட்ட ஆணையாளருமான எஸ்.சதாசிவ ஐயர் மற்றும் மாவட்ட உதவி அரச அதிபர் எஸ்.வீரபத்திரபிள்ளை ஆகியோர் இப்பயிற்சிப்பட்டறையை நடத்தினர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள தபால் மூல வாக்களிப்பு மற்றும் ஏப்ரல் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் காலங்களில் ஆற்றப்படவேண்டிய கடமைகள் பற்றியும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது. தேர்தல் அலுவலர்களுக்கான சத்தியப்பிரமாணமும் இங்கு வாசித்து வழங்கப்பட்டது. (ப)

# தெங்கு பயிர்ச் செய்கையாளருக்கான மானியத்தை 50 ஆயிரமாக அதிகரிக்கவும்

## தென்னை அபிவிருத்திச் சபை கோரிக்கை

தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு வடமாகாண தென்னை அபிவிருத்திச்சபையினர், இலங்கைத் தெங்கு பயிர்ச்செய்கை அபிவிருத்திச் சபையிடம் கோரிக்கை விடுத்துளனர்.

அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும், கடந்தகால யுத்த அனர்த்தத்தால் தெங்குப் பயிர்ச்செய்கை மிகவும் மோசமாகப் பாதிப்புற்றுள்ள நிலையில், அவற்றை மீளவும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே இருந்துவரும் உதவித்திட்டப்படியே நிதி உதவி வழங்கப்பட்டுவருகிறது.

இதற்கமைய ஒரு ஏக்கர் தெங்குப்பயிர் உற்பத்திக்கு 15 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. தற்போதைய தென்மராட்சிப் பகுதியில் மீள் தெங்குப்பயிர்ச் செய்கை உற்பத்தியில் ஈடுபட்டுவருவோருக்கு இத்தொகை போதாததாக உள்ளது.

எனவே, அத்தொகையை 50 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தாலே ஓரளவிற்கு யாழில் அழிந்துபோன தெங்குப் பயிர்ச் செய்கையைக் கட்டி எழுப்பமுடியும். இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதுடன்,

யாழ்.மாவட்டத் தெங்குப்பயிர்ச் செய்கையாளர்களின் பல காணிகள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளன. அவற்றின் பயன்களைப் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாக தெங்குப் பயிர் உற்பத்தியாளரின் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

-பொதுத் தேர்தல் 2004- பெண்கள் பண்பாட்டு மையம்

# தேர்தல் களத்தில் பெண் பிரதிநிதித்துவம்



தேர்தல் வரும் - போகும் யாரோ கதிரைகளைப் பிடிக்க ஆசைப்படுவார்கள், அடிபடுவார்கள். வாக்குகளை வேண்டி வீடுதேடியும் வருவார்கள். தன் காரியம் முடிய யாரையும் காண முடிவதில்லை. அப்படியே எமது காலங்களும் ஓடியதுதான் வரலாறு. ஆனால் இம்முறை (2004) தமிழ்மக்களாகிய நாம் மிகக் கவனமாக செயற்படவேண்டிய தேர்தல் களமிது.

கடந்த காலங்களைவிட மிகமுக்கியமான காலகட்டத்தில் நிற்கின்றோம். இத்தேர்தலை சரியாகப் பயன்படுத்தினால்தான் முன்னுக்கு வரலாம். இந்தத் தேர்தல் தனியே சலுகைகளுக்கானதல்ல. தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் இது உரிமைக்கான போராட்டம். சர்வதேசம் எங்கும் தமிழ் மக்கள் தம் உரிமைகளை எவ்வாறு பொங்கு தமிழில் கோரி நின்றனரோ அத்தகையதொரு வடிவமாகவே இந்தத் தேர்தல் உள்ளது. தமிழ் மக்களாகிய நாம் விடுதலை பெறவேண்டுமாயின் வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவரும் வாக்களிக்க வேண்டும்.

குறிப்பாக பெண்கள் பயத்தில் உறைந்து வீடுகளில் முடங்கிக்கிடந்து சதா துன்பப்பட்டு அழுவதில் பிரயோசனமில்லை. நியாயமான கற்பனையுடன் வாழும்போது தங்கள் மீது திணிக்கப்படும் அடக்குமுறைகளை களைந்து முன்வரமுடியும். பெண்கள் எழுச்சிகொள்ளும் போது சமூகத்தில் மாற்றம் முழுமைபெறும். உச்சத்தையும், உயர் இலக்கையும் அடையகூடிய இடத்தை இந்தப் பெண்பிரதிநிதி பெற்றுத் தருவார் என நம்புகின்றோம்.

பெண்களின் வாழ்வில் நியாயமான உரிமைகள் இருக்கின்றன. அவை வெளியில் வரமுடியும், முன்னேறமுடியும் என்பதை ஆணித்தரமாக பிரவாகிக்கச் செய்யும் பலம் திருமதி பத்மினி சிதம்பரநாதனுக்குண்டு.

பெண்களாகிய நாம் எமது வாழ்வை பெறவேண்டுமாயின் எமது உரிமைக்காக குரல் கொடுக்கத் துணிந்து களமிறங்கியிருக்கும் பெண்ணின் கைகளைப் பலமாக்க வேண்டியது முக்கியமாகும். அப்போது பெண்களிற்கான விடுதலை மிக அண்மித்து விடுவதை பெண் பிரதிநிதித்துவம் சாதித்துவிடும்.

எமது சமூகத்திலேயே சரிபாதியினர் பெண்கள். இந்தச் சரிபாதித் தொகையினரான பெண்கள் போராட்டத்தில பங்குபெறாது எமது தேசிய விடுதலை சாத்தியப்படாது. சரிபாதியிலான பெண்களுக்கு விடுதலையின்றி எமது தேச விடுதலையும் முழுமை பெறாது. ஆணும் பெண்ணும் சமமான ஆற்றலுடனேயே படைக்கப்பட்டுள்ளார்கள் என்ற உடற்கூற்றியல் நிபுணர்களது கூற்றுக்குப் பெண்புலிகளே உலகிற்கு உதாரணமானவர்கள் என்கின்றார் தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன். இங்கு ஆளுமை, எழுச்சிபற்றியே உணரமுடிகின்றது.

எமது போராட்டத்தில் பெண்கள் அரசியல் இராணுவம் மருத்துவம் ஊடகவியல் என சகல துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெரும் வளர்ச்சி கண்டுள்ளனர் என, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விழுதாகி வேருமாகி நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

எனவே, பெண்கள் மற்றவர்களுக்காக பந்து ஒடுங்கி அடங்கி வாழ்வது அவர்களுக்கான வாழ்க்கை அல்ல. தமது திறமைகள், செயற்பாடுகள் ஆகியவற்றிலும் செயல் முனைப்புடன் பெண்கள் வாழ்வதே உண்மையான வாழ்க்கை.

தம் செயல் முனைப்பை சர்வதேச அரங்கில் பொங்குதமிழில் சுடர் விட்டெரிந்து தமிழர் தம் உரிமைக்காக போராடத் துணிந்த எம் தேசத்தின் முதல் பெண் வேட்பாளராக பத்மினி சிதம்பரநாதன் களமிறங்கியிருப்பதையிட்டு பெண்கள் பண்பாட்டு மையம் பெருமிதம் கொள்கின்றது.

எங்கு பெண்கள் விழிப்பற்று இருக்கின்றார்



**எமது சமூகத்திலேயே சரிபாதியினர் பெண்கள். இந்தச் சரிபாதித் தொகையினரான பெண்கள் போராட்டத்தில பங்கு பெறாது எமது தேசிய விடுதலை சாத்தியப்படாது.**

மாநாடு, பெண்கள் சங்கமம் ஆகிய இடங்களும் பொங்குதமிழ் அரங்கும் இவர் உணர்வு காட்டும்.

பெண்களாகிய நாம் அடிபட்டு நசிந்து குறண்

"சமூக விடுதலை என்ற குறிக்கோளில் பெண்விடுதலை பிரதான இடம் வகிக்கின்றது' இவ்வாறு தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள் பாகம் XXVII - சிவா சின்னப்பொடி

# பாரிசில் நடைபெற்ற தேர்த் திருவிழா



**ஆ**னால், அருகிலிருந்த கடைக்காரர்களுக்கும் அந்தத் தெருவில் குடியிருந்த மக்களுக்கும் இந்தக் கடையில் ஏதோ வித்தியாசமான நிகழ்வு நடைபெறுவதாக சந்தேகம் வந்தது.

அந்தக் காலத்தில் தமிழ்மக்களுடைய வழிபாட்டு முறைகள் பற்றியும், கலாசார ஒன்றுகூடல் பற்றியும் ஐரோப்பிய மக்களுக்கு அவ்வளவு புரிதல் இருக்கவில்லை. அதிகளவு தமிழ் மக்கள் தங்கள் தெருவில் கூடி மணிக்கணக்கில் தரித்துச் செல்வதை தங்களுக்கு இடைஞ்சலான செயற்பாடாகவே அவர்கள் பார்த்தார்கள். எனவே, கடையில் வித்தியாசமான நிகழ்வு நடப்பதாக அவர்கள் காவல் துறையில் முறையீடு செய்துவிட்டனர். காவல் துறையினர் வருவாய் காவல்துறையினரின் உதவியோடு அந்தக் கடையில் திடீர் சோதனை நடத்தினர். கடைக்கு காவல்துறையினர் நுழைவதைக் கண்ட ஊழியர்கள் பின்பகுதியில் இருந்த பிள்ளையார் கோயில் வழிபாடு நடந்ததற்கான தடயங்களை எல்லாம் அவசர அவசரமாக மறைத்துவிட்டனர்.

ஒரு ஊழியர் பிள்ளையார் சிலையின் மீது 1000 பிராங் என்ற விலைப்பட்டியையும் தொங்கவிட்டுவிட்டார்.

அந்தக் கடையைச் சோதனையிட்டவாறு பின்பகுதிக்கு வந்த வருவாய் துறையினர் -

> உங்களைப்போல இங்கே வரமுடியாமல் நிறையப் பேர் அங்கே போருக்குள் சிக்கி கஷ்டப் படுவார்களே! பல குழந்தைகள் போரில் ஆதரவற்றவர்களாக ஏக்கப்பட்டிருப்பார்களே! நீங்கள் இப்படி ரோட்டில் அடித்து வீணாக்கும் தேங்காய்க்கு உரிய பணத்தை - போரில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்கு அனுப்பலாமே.

பிள்ளையார் சிலையைப் பார்த்து அதிசயப் பட்டனர். அது ஏதோ அபூர்வமான கலைப் பொருள் என்றே அவர்களுக்குப்பட்டது.

அது களஞ்சியப் பகுதியில் வைக்கப்பட்டிருந்ததும், அதன் மேல் 1000 பிராங் விலைப் பட்டி கட்டப்பட்டிருந்ததும் அவர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

பல இலட்சம் பிராங் பெறுமதியான ஒரு கலைப்பொருளை கடைக்காரர் கடத்தி வந்து பதுக்கிவைத்திருப்பதாக அவர்கள் சந்தேகப் பட்டனர்.

கடை உரிமையாளரிடம் அந்த நேரத்தில் அந்தப் பிள்ளையார் சிலையை அங்கு கொண்டு வந்ததற்கான காரணங்கள் இருக்கவில்லை.

வருவாய்த் துறையினரின் உத்தரவின்பேரில் காவல்துறை அந்தச் சிலையை எடுத்துச் சென்று காவலில் வைத்துவிட்டனர்.

பாரிஸ் நகரத்தில் எப்போதும் நம்மவர்களுக்கு வீட்டுப் பிரச்சினை அதாவது பிரெஞ்சு மொழியில் சொல்வதானால் 'டொமசில் புறொப்பிளம்' இருப்பது வழக்கம்.

இது பற்றி நம்மவர்கள் பேசும்போது பிளையாருக்கே 'டொமிசில் புறொப்பிளம்' வந்து சிறையில் இருந்தவர் என்று இந்தச் சம்பவத்தைச் சொல்வதுண்டு.

1990 இற்குப் பின் - பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் என்று (லண்டனில் ஏற்கனவே இருந்தது) பல கோவில்கள் உருவாகத் தொடங்கின.

உரியமுறையில் அனுமதி பெறப்பட்டே இந்தக் கோவில்கள் அமைக்கப்பட்டன. பாரிசைப் பொறுத்தவரை வாகனத் திருத்துமிடங்களாக இருந்த கராஜ்கள்தான் கோவில்களாக மாறின.

கோவில்கள் மக்களுடைய மெய்யியல் தேவைகளுக்காக, நிறுவப்பட்டதாக சொல்லிக் கொள்ளப்பட்டாலும் புலம் பெயர் நாடுகளில் அவை இலாபம் தரக்கூடிய வர்த்தக அமைப்பாக செயற்பட்டதையும் மறுக்கமுடியாது.

90 களின் நடுப்பகுதியில் இருந்த பாரிஸ் நகரத்திலிருந்த ஒரு கோவிலின் தேர்த்திருவிழா பிரபலம் பெறத் தொடங்கியது.

பாரிஸ் 10 (லாசப்பலை உள்ளடக்கியது) நிர்வாகப் பிரிவிலிருந்த அந்தக் கோவிலின் தேர்த்திருவிழாவே பிரான்சில் தமிழ் மக்கள் ஆகக்கூடிய அளவுக்கு ஒரே இடத்தில் ஒன்று கூடக்கூடிய விழாவாக இருந்தது.

லாசப்பல் பகுதியில் நடக்கும் இந்த தேர்ப் பவனி அங்குள்ள பல சிறுவீதிகளைக் கடந்து றூது பிறீபேர்க் சென்ரனி என்னும் பிரதான வீதியினூடாகச் செல்வது வழக்கம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளில் நடக்கும் இந்தத் திருவிழாவுக்கு பாரிஸ் மாநகரசபை 10 நிர்வாகப் பிரிவுக்குரிய நீர்த் தாங்கி வண்டியொன்று முதலில் தேர் செல்லும வீதிகளைக் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டு செல்லும்.

அந்த வீதிகளின் இருமருங்கில் இருக்கும் நூற்றுக்கணக்கான தமிழர் வர்த்தக நிலையங்களின் முன்றலில் - நிறைகுடம், கும்பம் எல்லாம் வைக்கப்பட்டு மாவிலை தோரணங்களால் (சில் வாழை மரங்கள் கட்டியும்) அலங்கரிக்கப்பட்டிருக்கும். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வெறுங்காலுடன் வீதிகளில் முன் செல்ல தேர் மெதுவாக ஆடி அசைந்து பவனி வரும்.

ஒருபுறம் காவடி - கரகம் - தீச்சட்டி என்று நட்டுவ மேளமும், நாதஸ்வரமும் முழங்க பல்லாயிரக்கணக்கான தேங்காய்கள் நடு வீதியில் அடித்துச் சிதறப்பட ஒவ்வொரு கடைக்காரரும் தங்களது செழிப்பைக் காட்டும் விதத்தில் குளிர்பானம், பொங்கல், வடை, அவல், கடலை என்று பொலித்தீன் பைகளில் போட்டு விநியோகிக்க ஒரு 3 அல்லது 4 மணிநேரம் அந்தப்பகுதி தமிழ் மயமாக பக்தி மயமாக காட்சியளிக்கும்.

தேர் சென்றபின்பு மாநகரசபைக்கு சொந்தமான குப்பைகளை உறிஞ்சி எடுத்து அகற்றும் வண்டிகள் தெருவெங்கும் சிதறுண்டு கிடக்கும் தேங்காய் சிதறல்களையும், பொலித்தீன் பைகளையும் அள்ளிச்செல்ல கடைசியாக ஒரு நீர்த் தாங்கி வண்டி மறுபடியும் அந்த வீதிகளைச் சுத்தப்படுத்திச்செல்லும்.

இந்தத் தேர்த்திருவிழா நடைபெறும்போது குறைந்தபட்சம் 20 கிலோ மீற்றர் தூரத்துக்கு பாரிசின் போத் து லா சப்பல் (**Pote de la chapple**) மற்றும் பெரிபெரிக் எனப்படும் பாரிசின் சுற்றுவட்ட வீதியிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கும்.

பிரான்ஸ் - பிரெஞ்சுப் புரட்சிக் காலத்திலிருந்தே மதத்தை அரசியலிலிருந்து ஓரங் கட்டிவிட்ட நிலையில் - கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விழா இரண்டையும் தவிர ஏனைய மதவிழாக்கள் அங்கு முக்கியத்துவம் பெறுவதில்லை.

இன்றைய தேவாலயங்களும் - இஸ்லாமிய பள்ளிவாசல்களுக்கும் பௌத்த தேவாலயமும் கூட பாரிசில் இருந்த போதும் அவற்றின் திருவிழாக்கள் போக்குவரத்து நெரிசலை உண்டுபண்ணும் விதத்தில் - பிரதான வீதிகளில் நடப்பதில்லை. தொடக்கத்தில் நம்மவர்களின் தேர்த்திருவிழா பாரிஸ் நகரமக்களுக்கு புதினமான ஒன்றாக இருந்தபோதிலும் பின் வந்த ஆண்டுகளில் குறிப்பிட்ட மக்களிடம் அது அதிருப்தியையும் ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்பாக 1997 ஆம் ஆண்டு பாரிஸ ஈழமுரசு பத்திரிகைக்காக லா சப்பலே பகுதியில் பிரெஞ்சு மற்றும் வேற்றின மக்களிடம் கருத்துக் கேட்டேன்.

வர்த்தகர்கள் நிரந்தர குடியிருப்பாளர்கள், வாகனங்களில் பயணிப்போர் என்று 1000 பேரிடம் கருத்தறிந்ததில் 648 பேர் இது தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று கருத்துக் கூறினார்கள்.

340 பேர் விடுமுறை நாள் என்றபடியால் தங்களுக்குப் பிரச்சினை இல்லை என்றார்கள். 12 பேர் கருத்துக்கூற மறுத்துவிட்டனர்.


தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று கருத்துக்கூறியவர்களில் 420 பேர் இதைப் புறநகர்ப்பகுதியில் பொது போக்குவரத்துக்கோ, மற்றவர்களுக்கோ இடைஞ்சல் இல்லாமல் செய்யலாமே என்றும் ஆலோசனையும் கூறியிருந்தனர். லாசப்பே பகுதியில் மிக நீண்டகாலமாக பூக்கடை ஒன்றை வைத்து நடத்திய மெடம் பெடரிக் என்ற 64 வயது மூதாட்டி கூறிய கருத்து மிகமுக்கியமான ஒன்றாக இருந்தது.

'உங்களுடைய நாட்டில் போர் நடப்பதாக சொல்கின்றீர்கள். போர் காரணமாகவே நீங்கள் இங்கே வந்ததாகச் சொல்கிறீர்கள். உங்களைப்போல இங்கே வரமுடியாமல் நிறையப் பேர் அங்கே போருக்குள் சிக்கி கஷ்டப் படுவார்களே! பல குழந்தைகள் போரில் ஆதரவற்றவர்களாக ஏக்கப்பட்டிருப்பார்களே! நீங்கள் இப்படி ரோட்டில் அடித்து வீணாக்கும் தேங்காய்க்கு உரிய பணத்தை - போரில் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்கு அனுப்பலாமே' என்பதே அந்த மூதாட்டியின் கருத்தாக இருந்தது.

அப்போது பாரிஸ் நகரத்தில் ஒரு தேங்காய் 6 பிராங் விற்றது. தேங்காய் பழம், கற்பூரம் உட்பட்ட ஒரு அர்ச்சனைத் தட்டு 50 பிராங் விற்றது. *(தொடரும்)*

# ஸ்பெயின் ரயில் நிலையங்களில் குண்டுத் தாக்குதல்கள் 190 பேர் பலி!

ஸ்பெயின் தலைநகரில் 'சுரெசா' இடத்திலுள்ள ரயில் நிலையங்களிலும் மற்றும் ரயில் வண்டிகளிலுமாக மொத்தம்



10 இடங்களில் நிகழ்ந்த குண்டுத் தாக்குதல்களில் சுமார் 190 பேர்வரை கொல்லப்பட்டும் 1240 பேர்வரை காயமடைந்துமுள்ளதாக அந்த நாட்டு உட்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் குண்டுத் தாக்குதல்கள் ஸ்பெயினில் இயங்கும் பிரிவினைவாத குழுவான 'ஏசா' வினால் நிகழ்த்தப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெயினில் நாளை மறுதினம் பொது, தேர்தல் நடைபெறுவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் ஸ்பெயினிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதலையடுத்து ஸ்பெயினின் அரசியல் கட்சிகள் தமது தேர்தல் பிரசாரங்களை நிறுத்தியுள்ளன.

மேலும், சென்ற மாதம் 'ஏரா' பிரிவினைவாத குழுவைச் சேர்ந்த போராளிகள் 500 கிலோ வெடிப்பொருட்களுடன் தலைநகர் மட்ரிட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். ஸ்பெயினின் பொதுத் தேர்தலை தடுப்பதற்காகவே பிரிவினைவாதிகள் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டதாக அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காஷ்மீரில் இடம்பெற்ற கிரனைட் தாக்குதல்; 4 பொதுமக்கள் பலி 50 இற்கு மேல் காயம்

இந்திய நிர்வாகத்தில் அமைந்துள்ள காஷ்மீர் தலைநகர் சிறிநகருக்கு அருகில் 'புட்கம்' மாவட்டத்தில், பொதுமக்கள் மத்தியில் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டும், 50 பேர்வரை காயமடைந்துமுள்ளதாகவும் இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது. கிராமவாசி ஒருவரின் வீட்டில் தீவிரவாதிகள் நுழைந்து பணயக் கைதியாக அவரை அழைத்துச் செல்லமுற்பட்டபோது குடும்பத்தவர்கள் அவலக்குரல் எழுப்பியதாகவும், கிராமத்தவர்கள் வீட்டின் முன் ஒன்றுகூடி அவரைத் தீவிரவாதிகளிடமிருந்து காப்பாற்ற முனைந்தபோது தீவிரவாதிகள் கிரனைட் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, செவ்வாய்க்கிழமை இரு தீவிரவாதிகள் அரசாங்க காரியாலயமொன்றில் நுழைந்து தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த வேளையில், அந்தக் கட்டடத்தில் சிக்கியிருந்த 5 படையினரை மீட்டபின் அந்தக் கட்டடத்தை தீயிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.



தற்போது இந்திய பாகிஸ்தான் அரசுகளினால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளினால் குழப்பமடைந்த தீவிரவாதிகள் இவ்வகையான தாக்குதல்களை மேற்கொள்வதாக இந்தியாவின் உதவி உள்நாட்டமைச்சர் அல் - மன்சூரின் தெரிவித்தார்.

# பிரேசில் காடுகளின் சூழல்மாற்றம் விஞ்ஞானிகள் கவலை தெரிவிப்பு



பிரேஸிலின் உஷ்ண வலயக் காடுகளின் சூழலில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பாக விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். இக்காடுகளில் காணப்படும் மரங்கள் ஒளித்தொகுப்பிற்காக உறிஞ்சிக்கொள்ளும் காபனீரொட்சைட்டின் அளவு குறைந்துவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் இந்தக் காடுகளில் ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள், இக்காடுகளில் காணப்படும் மரங்கள் விரைவில் அழிந்துவிடுவதாகவும் தெரிவித்துள்ளனர். இவ்விஞ்ஞானிகள் 14000 மரங்களை ஆய்விற்காக தேர்ந்தெடுத்திருந்தனர். மேலும் 4 அங்குல அடி விட்டத்தைக் கொண்டமரங்களை தமது ஆய்விற்கு தேர்ந்தெடுத்திருந்தனர். மேலும் இம்மரங்கள் தமது வளர்ச்சிக்காக தமக்கு அருகாமையில் காணப்பட்ட சிறிய மரங்களில் சார்ந்திருந்ததாக தெரிவித்தனர். இதன்மூலம் இம்மரங்கள் வளியில் இருந்து காபனீரொட்சைட்டை உறிஞ்சி உணவு தயாரிக்கும் நிலையிலிருந்து மாற்றம் கண்டுள்ளதாக ஆய்வின்மூலம் அறிந்துகொண்டனர்.

# தென்கொரிய ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை தாமதம்



தென்கொரியாவில் ஜனாதிபதி 'ரோ - மூ கையுன்' னிற்கு எதிராக மேற்கொள்ளப்படவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான வாக்கெடுப்பிற்கு, ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வாக்கெடுப்பை தடைசெய்தனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றியீட்டுவதற்கு அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பகுதியினரின் வாக்குகள் தேவைப்படுவதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.




தென்கொரிய ஜனாதிபதியின் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற்றால், 6 மாதங்கள்வரை ஜனாதிபதியை பதவியிலிருந்து நிறுத்திவைப்பதற்கு தென்கொரிய



சட்டம் அனுமதித்துள்ளதாகவும் எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

தென்கொரிய சட்ட சபையின் 271 அங்கத்தவர்களில் 181 இற்கு மேற்பட்டவர்கள் அதிபர் 'ரோ' பதவியிலிருந்து விலகுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, இன்று நம்பிக்கையில்லா வாக்கெடுப்பினை மீண்டும் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் சட்டங்களினை ஜனாதிபதி மீறியுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன. இந்தக் குற்றங்களுக்கு மன்னிப்புத் தெரிவிக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால், 'ரோ' அவற்றிற்கு மன்னிப்புத் தெரிவிப்பதற்கு மறுத்தமையே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு காரணமென தெரிவிக்கப்பட்டது.

சென்ற ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும்போது, அரசிற்கும், வர்த்தக ஸ்தாபனங்களுக்குமிடையே காணப்படும் ஊழல்களை அகற்றுவதாக ரோ தெரிவித்தே தேர்தலில் வெற்றிபெற்றிருந்தார்.

## காஷ்மீர் சட்டசபையில்

# பெண்கள் மசோதாவிற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிப்பு

[illegible] நிர்வாகத்தில் அமைந்துள்ள காஷ்மீர், சட்டசபையில் நேற்று விவாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான மசோதாவிற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதாவின் மூலம் காஷ்மீர் பெண்கள் வெளிப் பிரதேசத்தை வாழ்விடமாக கொண்டுள்ளவரை திருமணம் செய்தால், அந்தப் பெண்கள் காஷ்மீரின் வாழ்விட உரிமையை இழந்துவிடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. காஷ்மீரின் முக்கிய கட்சிகள் இதற்கு ஆதரவு வழங்கியிருந்தும், தேசியக்கட்சிகளான பாரதீய ஜனதாக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

இந்தியாவின் பொதுத் தேர்தலில் இந்தப் பிரச்சனை முக்கிய தேர்தல் பிரசாரமாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. காஷ்மீரின் ஆளும் மக்கள் ஜனநாயக கட்சியினால் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. கீழ்ச் சபையினால் இந்த மசோதா ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக முக்கிய வர்த்தக ஸ்தாபனங்களும், பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டுள்ளன.



இதனிடையே ஜம்முகாஷ்மீர் பிரதேசத்தின் அரசியல் சட்ட வரைபு இந்தியாவின் அரசியல் சட்ட வரைபிலிருந்து மாறுபட்டுள்ளன.

# 75 வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சி வெளியீடு

இந்திய காங்கிரஸ் கட்சி 75 பேர் அடங்கிய முதல் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் மயிலாடுதுறை தொகுதிக்கு மணிசங்கர் ஐயரும், நீலகிரி தொகுதிக்கு பிரபுவும் வேட்பாளராக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சி, 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது. கூட்டணிக் கட்சிகள் எல்லாம் வேட்பாளர்களை அறிவித்துவிட்ட நிலையில் காங்கிரஸ் கட்சியின் பட்டியல் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுவந்தது.

தமிழ்நாட்டிலிருந்து காங்கிரஸ் தலைவர்கள் பலர் டெல்கியில் முகாமிட்டு போட்டியிட இடம்கேட்டு மேலிடத்தை வற்புறுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி வருகிற நாடாளுமன்ற தேர்தலுக்காக 75பேர் அடங்கிய முதல் வேட்பாளர் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

பெரும்பாலும் எம்.பி.யாக இருந்து வருபவர்களுக்கு மீண்டும் போட்டியிட இடம்கிடைத்து இருக்கின்றது. 16 பேர்கள் மட்டுமே இதில் புதுமுகங்கள் ஆவார்கள்.

தமிழ் நாட்டில் 2 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

அதன்படி மயிலாடுதுறையில் மணிசங்கர் ஐயரும் நீலகிரி தொகுதியில் பிரபுவும் போட்டியிடுகிறார்கள்.


இந்தப் பட்டியலை காங்கிரஸ் பொதுச் செயலாளர் அம்பிகா சோனி வெளியிட்டார்.

மத்திய பிரதேசத்தில் 13 வேட்பாளர்களின் பெயர்களும் கர்நாடகத்தில் 12 பெயர்களும் மராட்டியத்தில் 7 பெயர்களும் ஆந்திராவில் 4 பெயர்களும் பட்டியலில் இடம்பெற்று இருக்கின்றன.

சிவராஜ்பட்டீல் கமல்நாத், பூட்டாசிங், ஜாபர்செரீப், பி.எம்.சயீத், பி.ஆர்.தாஸ்முன்சி, ரேணுகாசவுத்திரி, ஜெய்பால் ரெட்டி, ஜோதிர் ஆதித்தியா, மார்கரெட் ஆல்வா ஆகியோர் பட்டியலில் இடம்பெற்று இருப்பதில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர்கள்.

வருகிற 16 ஆம் திகதி 2 ஆவது பட்டியலை காங்கிரஸ் வெளியிட இருக்கிறது. அதில் 100 வேட்பாளர்களின் பெயர்கள் இடம் பெறும் என்று தெரியவருகிறது.

# கைதான 64 கூலிப்படைகளுக்கும் சிம்பாப்வே மரணதண்டனை தீர்ப்பு



சிம்பாப்வே நீதிமன்றத்தில் கூலிப் படைகள் எனக் கருதப்படும் 64 பேருக்கு எதிராக மரணதண்டனை விதிக்கப்படும் என சிம்பாப்வே அரசு தெரிவித்துள்ளது. இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிம்பாப்வேயின் சாரானி விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரை விசாரிக்கும்போது - கஜானாவில் புரட்சி ஒன்றிற்கு திட்டமிட்டுவந்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

இதேவேளை - விமானத்தில் பிரயாணம் மேற்கொண்ட ஏனைய பிரயாணிகள் வேறு நாடு ஒன்றிற்கு சுரங்கத் தொழிற்சாலையில் பாதுகாவலர்களாகப் பணிபுரிவதற்காக செல்வதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதனிடையே சிம்பாப்வே, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் - கஜானாவின் நட்பு நாடென்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், கஜானாவின் ஜனாதிபதி ரியோடொறோ ஒபியாங் நிகுமாவை சதிமூலம் பதவியில் இருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகளை இவர்கள் மேற்கொண்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டி ருந்தது.

கைதுசெய்யப்பட்டவர்கள் அமெரிக்கா, பிரித்தானியா, ஸ்பெயின் நாடுகளின் புலனாய்வுப் பிரிவிற்கு பணிபுரிபவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# குவன்ரனமோ சிறையிலிருந்து விடுவித்த 3 பிரிட்டிஷ் கைதிகள் மீளவும் கைது



கியூபாவின் தீவான குவன்ரனமோவில் சிறையில் இருந்து பயங்கரவாதம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட பிரித்தானிய கைதிகள் மூவர் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால், இவர்கள் பிரித்தானிய விமான நிலையத்தில் வைத்து பிரிட்டிஷ் பொலிஸாரினால் மீண்டும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். மீண்டும் கைதானதற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

விடுவிக்கப்படடிருந்தவர்கள் அரசினால் நடத்தப்படும் பாதுகாப்பு இல்லங்களுக்கு அழைத்துச்செல்லப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே - தொடர்ந்தும் குவான்ரனமோரில் சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளையும் விடுவிப்பதற்கும் ஒழுங்குக்ள் மேற்கொள்ளுமாறு அரசின் உறவினர்கள் கேட்டுள்ளனர்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக விசாரணைகள் இன்றி சிறையில் இவர்கள் அடைத்து வைக்கப்பட்ருந்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## கல்முனையில் ஹர்த்தால்:

# துப்பாக்கிச் சூட்டில் சிக்கி இரு பொதுமக்கள் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் - கல்முனைப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரியை இடம்மாற்றியதைக் கண்டித்து நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கையில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கல்முனைப்பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரியான எ.எச்.எம்.நசீம் என்பவர் அம்பாறைக்கு திடீரென நேற்றுமுன்தினம் இடம்மாற்றப்பட்டார். இவரது இந்த திடீர் இடமாற்றத்தினை எதிர்த்து 'கல்முனை தொகுதி தமிழ், முஸ்லிம் நட்புறவு ஒன்றியம்' என்ற அமைப்பு நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு, நேற்று முன்தினம் இரவு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தது.

இதன்படி நேற்று கல்முனைப் பகுதியில் அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பன இயங்கவில்லை. வீதிகளிலும் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன் பெற்றோல் குண்டுகளும் வெடிக்கவைக்கப்பட்டன.

இந்த நேரத்தில் அவ்விடத்திற்கு வந்த இனந்தெரியாத சிலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அங்கு நின்ற இருவர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் கல்முனையைச் சேர்ந்த எம்.எஸ்.கமால் (வயது 17), சாய்ந்தமருதைச் சேர்ந்த இர்பான் ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இவர்களில் இர்பான் கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு, கமால் மேலதிக சிகிச்சையின் பொருட்டு கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இதேவேளை, இரண்டு முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (07)

## நின்றுகொண்டிருந்த...

சிவநேசன் (வயது 44), சந்தனதேவி (வயது 45), பரிமளா (வயது 55), மோகனதாஸ் (வயது 37), மரீஸ் கந்தவேல் (வயது 63), மோகனபவான் (வயது 36) ஆகியோரே காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, பரந்தன் பகுதியூடாக முகமாலை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பயணிகள் பேரூந்து பரந்தன் நோக்கி பயணிப்பதற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிக்கப் வாகனத்துடன் மோதியதில், பிக்கப் வாகனம் அருகில் இருந்த பள்ளத்தில் வீழ்ந்தது.

இந்த விபத்து தொடர்பாக தமிழீழ காவல்துறையினரின் போக்குவரத்துப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது.

## யாழ். அரச வைத்தியர்களும் ...

தியர்கள் சம்பள முரண்பாடு தொடர்பாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தமது கோரிக்கைகளை முன்வைத்தபோதும் இந்தக் கோரிக்கை குறித்து நேற்றுவரை அமைச்சரவையில் பேசப்படவில்லை. இதனால், சுகாதார ஊழியர்களுக்கும், சிரேஷ்ட வைத்தியர்களுக்கும் சமஅளவான சம்பளம் வழங்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து - நேற்றுக் காலை தொடக்கம் நாடு தழுவிய் ரீதியில் வைத்தியர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவந்த சிலர் வைத்தியசாலை நோயாளர் தங்கும் விடுதியில் தங்கிநின்று சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வைத்தியர்களின் தொடர் வேலை நிறுத்தப்போராட்டத்தினால் யாழ். போதனா வைத்தியசாலையின் பெரும் பகுதிகள் செயலிழந்துள்ளன.

### கருணா விவகாரத்தின்...

றமை மற்றும் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள யு.எஸ்.எயிட் அலுவலகம் ஆகியன அமெரிக்காவின் அக்கறைக்கும் சான்றுகளாகும்.

மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இந்தியாவையோ, அமெரிக்காவையோ நேரடியாகச் குற்றம் சாட்டாதபோதும், வெளிநாட்டுச் செய்திச்சேவை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக மறுக்கும் வெளிநாட்டுச் சக்தி ஒன்றே கருணாவின் பின்னணியிலிருந்து செயற்படுவதாக அவர் கூறினார். அந்தச்சக்தி இந்தியாவே என ஹிந்துஸ்தான் ரைம்ஸ் இதழ் தெரிவித்துள்ளது. (01)

# 4 வருடங்களில் மூன்றாவது தேர்தல் மிகவும் வேதனையான விடயமாகும்

## ஜோன் குஷ்கான் விசனம் தெரிவிப்பு

(கொழும்பு)

நான்கு வருடத்துள் இலங்கையில் மூன்றாவது தேர்தல் இடம்பெறுவது மிகவும் கவலையளிப்பதாகவுள்ளது என இலங்கை வந்துள்ள ஐரோப்பிய யூனியனின் பிரதான தேர்தல் அவதானிப்பாளர் ஜோன் குஷ்கான் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள தேர்தலில் தமது கடைப்பாடு என்ன என்பது குறித்து நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐரோப்பிய யூனியன் உலகம் முழுவதும் ஜனநாயகத்தை வலிப்படுத்துவதையும், மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் உறுதியாக ஆதரிக்கின்றது. இதனால் எமது உதவி குறித்து வேண்டுகோள்விடுக்கும் நாடுகளுக்கு தேர்தல் அவதானிப்புக்குழுக்களை அனுப்பும் விடயத்தில் சாதகமான பதிலை அளிக்க விரும்புகின்றோம்.

ஆயினும், நான்கு வருடகாலத்தினுள் மூன்றாவது தடவையாக மீண்டும் எம்மை இலங்கைக்கு வருமாறு கேட்டபோது நாம் சிறிது சிந்திக்க வேண்டியிருந்தது.

2000ஆம் ஆண்டிலும், 2001ஆம் ஆண்டிலும் இடம்பெற்ற தேர்தல்களுக்குப் பின்னர் தேர்தல் செயல்முறையை வலுப்படுத்துவது சம்பந்தமாக நாம் செய்திருந்த விதந்துரைப்புகள் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாகவும் விடயங்கள் மேலும் சிக்கலடைந்திருந்தன.

இத்தகைய பிரச்சினைகள் இருந்தபோதிலும், இலங்கையின் சாதாரண குடிமக்கள் ஜனநாயக செயல்முறை மீது கொண்டுள்ள ஆழமான அர்ப்பணிப்புணர்வு குறித்து ஐரோப்பிய ஒன்றியம் நன்கு அறிந்துள்ள காரணத்தால் நாம் மீண்டும் ஒருமுறை தேர்தல் கண்காணிப்பிற்காக இலங்கை வந்துள்ளோம்.

இந்தத் தேர்தல் காலத்தில் நாம் 2000ஆம் மற்றும் 2001ஆம் ஆண்டு தேர்தல் காலங்களில் இடம்பெற்ற அரசு மூலவளங்கள் துஷ்பிரயோகம் ஊடகங்கள் பயன்படுவதில் சமத்துவமின்மை, தேர்தல் வன்செயல்கள், வாக்காளர் பதிவில் பிரச்சினைகள். சில வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லமுடியாமை போன்ற பிரச்சினைகள்மீது பிரத்தியேக கவனம் செலுத்தவுள்ளோம்.

இத்தேர்தலில் போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் அரசியல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்று எதிர்பார்ப்பதன் நிமித்தம் ஒரு புதிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

அரசியற்கட்சிகளும், கூட்டணிகளும், வேட்பாளர்களும் அணிதிரட்டுதல் பிரயாணம் செய்தல், கூட்டங்களை நடத்துதல், மற்றும் பகிரங்கமாகத் தமது கருத்துக்களைக் கூறுதல் போன்ற விடயங்களில் அவர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் உள்ளதென்பது குறித்து ஆராய்வது ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் மதிப்பீடுகளில் ஒரு முக்கிய விடயமாக அமையும். இது முழு நாட்டிலும் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதை உறுதிசெய்வதிலும் நாம் பிரத்தியேக கவனம் செலுத்துவோம்.

சகல வாக்காளர்களும் தமது வாக்குரிமையைப் பயமின்றி, வன்செயல் அச்சுறுத்தலின்றி பிரயோகிக்கக்கூடிய நிலையில் தேர்தல் நியாயமான முறையில் இடம்பெறுமானால் ஜனநாயகம் மேன்மையுறும் என்பதில் நம்பிக்கைகொண்ட சகல அரசியல் கட்சிகளுடனும், தேர்தல் அதிகாரிகளுடனும் சேர்ந்து பணியாற்றுவதை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். என மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

### புலிகளின்...

உதவிகள் தொடர்பாகவும், நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் தொடர்பாகவும், விவாதித்ததாக எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு...

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி எடுத்துவரப்பட்ட சுமார் 10 ஆயிரம் வரையிலான தமிழ்ப் பத்திரிகைகளை எரியூட்டினர்.

இத்தகையதொரு செயல் நேறறு முன்தினம் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாண...

இந்தக் கலந்துரையாடலுக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் ஸ்ரீசத்திவேல் தலைமை தாங்கினார்.

இதேவேளை, பிரித்தானியத் தூதுவர் ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு விஜயம் செய்து அங்கு டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரசே தமிழ் மக்களை...

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு ஓரணியில் நிற்கின்றோம். இதனை நடைபெறவுள்ள தேர்தல் வெளிப்படுத்தி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

உண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே. ஏனெனில் இவர்கள் எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை அரசு கருத்திலும் கொள்ளவில்லை.

இலங்கை வரலாற்றில் பல தடவை தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

புனரமைப்பு, அபிவிருத்தி என்று மாயத் தோற்றத்தை உருவாக்கி பல ஆசைகள் கனவுகளை ஏற்படுத்தி விட்டு கடைசியில் எதுவும் செய்யாது அரசு கலைக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் சமாதான உடன்படிக்கையின் மூலம் வெடிச்சத்தங்களையும், உயிரிழப்புக்களையும் சந்திக்காதபோதும் மனதில் வடுக்களை மட்டும் இன்னமும் சுமந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலைமாற்றப்பட்டு இனி வரும் காலத்திலாவது தமிழர் பிரதேசங்கள் கட்டி எழுப்பப்பட்டு வடிவானதும், சுதந்திரமானதுமான பாதை திறக்கப்படுதல் வேண்டும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.(ப)

## ஜேர்மன் தூதுவர்...

னைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் -

அமைதிப் பேச்சுகளை மீளவும் தொடர்வது குறித்தும் ஜேர்மன் நிதி உதவியுடனான வளர்ச்சித் திட்டங்களை வடக்கு - கிழக்கில் செயல்படுத்திவருவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய ஜேர்மன் தூதுவர், வடக்கு - கிழக்கில் தேர்தல் அமைதியாக நடைபெற புலிகள் ஒத்துழைப்பு அளிப்பதாக கூறியதாகவும் ஜேர்மன் உதவியுடனான செயற்பாட்டுத் திட்டங்கள் வடக்கில் துரிதமாக செயல்படுத்தப் பட்டு வருவதாகவும் கூறினார்.







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.